॥ श्री ॥

॥ स्तोत्ररत्नमाला ॥

(A collection of Valuable Portions)

BY

कोटिकन्यकादान ताताचार्यः
श्रीरङ्गम् ।

त्रिशिरःपुरीस्थ नाषनल् कालेज् संस्कृताध्यापकेन
वाजपेय. श्री. वि. पाट्टराचार्यशिरोमणिना
परिशोधिता ।

ஸ்தோத்ர ரத்ந மாலா

BY

கோடி கந்யகாதாந தாதாசார்ய: ஸ்ரீரங்கம்.

திருச்சி நாஷனல் காலேஜ் ஸம்ஸ்க்ருத ஆசிரியர்:
வாஜபேய. ஸ்ரீ. வி. பாட்டாசார்ய
சிரோமணியால் பரிசோதிக்கப்பட்டது

Price R[illegible] 195[illegible] [Postage Extra.

॥ श्रीः ॥

॥ स्तोत्ररत्नमाला ॥

(A collection of Valuable Portions)

BY

कोटिकन्यकादान ताताचार्यः
श्रीरङ्गम्।

त्रिशिरःपुरीस्थ नाषनल् कालेज् संस्कृताध्यापकेन
वाजपेय· श्री. वि· पाट्टराचार्यशिरोमणिना
परिशोधिता।

ஸ்தோத்ர ரத்ந மாலா

BY

கோடி கந்யகாதாந தாதாசார்ய: ஸ்ரீரங்கம்.

திருச்சி நாஷனல் காலேஜ் ஸம்ஸ்க்ருத ஆசிரியர்:
வாஜபேய. ஸ்ரீ. வி. பாட்டாசார்ய
சிரோமணியால் பரிசோதிக்கப்பட்டது

Price Re. 1] 1951 [Postage Extra


ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது

16-5

பொருளடக்கம்

		பக்கம்
1	பூதேவீஸ்தோத்ரம்	2
2	லக்ஷ்மீ ஸ்தோத்ரம்	3
3	மஹாபுருஷ ஸ்தோத்ரம்	7
4	அச்யுதாஷ்டகம்	13
5	ருக்மிணீ ப்ரார்த்தனை	19
6	ப்ரஹ்மாதிதேவஸ்துதி:	26
7	ஸ்ரீ கிருஷ்ணகர்ணாம்ருதம்	45
8	,, இரண்டாவது ஆச்வாஸம்	55
9	ஸ்ரீ ராமகர்ணாம்ருதம்	58
10	ஆளவந்தார் ஸ்தோத்ரம்	64
11	நதீஸ்தோத்ரம்	67
12	சுகமுனிவரின் ப்ரார்த்தனை	70
13	ஸ்ரீ பாகவத ஸங்க்ரஹம்	75
14	த்ருவஸ்துதி	76
15	கோபிகாகீதம்	87
16	ஹர்யஷ்டகம்	102
17	ப்ராத: ஸ்மரணம்	109
18	கிருஷ்ணாஷ்டகம்	112
19	மானஸிகஸ்நாநம்	117

20	கோவிந்தம் (தசாவதார ஸ்தோத்ரம்)	120
21	சதுச்ச்லோகி	130
22	சரணாகதி மந்த்ரம்	135
23	ஸ்ரீபராசரபட்டர் அநுக்ரஹித்த ஸ்தோத்ரம்	136
24	ஸ்ரீ பகவத்கீதை	137
25	ஸ்ரீரங்க கத்யம்	139
26	கத்யத்ரய ச்லோகம்	142
27	ஜிதந்தே ஸ்தோத்ரம்	143
28	உத்தவஸ்துதி	147
29	முகுந்தமாலை	148
30	ந்யாஸ தசகம்	149
31	பகவத் ஸ்தோத்ரம்	156
32	பதரீ மாஹாத்ம்யம்	157
33	கும்பகோண மாஹாத்ம்யம்	159
34	ராமாயண ஸங்க்ரஹம்	161
35	பக்தர்களின் ஸ்மரணை	163
36	ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்ரம்	,,
37	ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் முதலியவை	170
38	திருமாலை முதலியவை	172



॥ श्री वेङ्कटेश्वरस्वामी, तिरुप्पति ॥

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள், திருப்பதி.

|| श्रीः ||

|| श्रीवेङ्कटेशप्रपत्तिः ||

ईशानां जगतोऽस्य वेंकटपतेर्विष्णोः परां प्रेयसीं
तद्वक्षःस्थलनित्यवासरसिकां तत्क्षान्तिसंवर्धिनीम्
पद्मालंकृतपाणिपल्लवयुगां पद्मासनस्थां श्रियं
वात्सल्यादिगुणोज्ज्वलां भगवतीं वन्दे
जगन्मातरम् ||

श्रीमन् कृपाजलनिधे कृतसर्वलोक
सर्वज्ञ शक्त नतवत्सल सर्वशेषिन् ।
स्वामिन् सुशील सुलभाश्रितपारिजात
श्रीवेंकटेश चरणौ शरणं प्रपद्ये ||



॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

श्रीमते श्रीनिवासताताार्यमहादेशिकाय नमः

श्रीमते रङ्गनाथताताार्यमहादेशिकाय नमः

श्री रघुनाथताताार्यमहादेशिकाय नमः

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

इति मङ्गलाचरणम्

भो आस्तिकमणयः, बहूनामास्तिकानामाशयमनुसृत्यायं 'स्तोत्ररत्नमाला' ग्रन्थः, महतां ग्रन्थेभ्यः, परम्परागतात् उपदेशमार्गाच्च समुद्धृत्य संगृह्य च प्रकाशितः। अम्बुधिमानासमर्थः सृगालबाल इव मितज्ञा वयं भगवतः कल्याणगुणान् समग्रं वक्तुमुत स्तोतुम् आहोस्वित् लिखितुमसमर्थाः स्मः इत्येतत् विदितं विश्वेषां विदुषाम् । अथ

च इहलोके महान्तः इतिहासपुराणादिषु स्तोत्रग्रन्थेषु च भगवद्गुणान् सम्यक् प्रकटीकृतवन्तः। उपदेशप्रकारेणापि स्फुटीकृताः ते कल्याणगुणाः विलसन्ति। अस्माकमपि कार्यगौरवात् सम्यक् समग्रं तेषामनुसन्धानं कर्तुमवकाशो दुर्लभः। अतः संग्रहेण तान् शुभदान् गुणान् अनुसन्धाय तेनात्मानं कृतार्थयितुं मार्गं कंचित् कल्पेमहि इति निश्चित्यायं ग्रन्थः प्रकाशितः। अनेके ग्रन्थाः व्यासादि-मुनिपुङ्गवैरनुगृहीता मुखपरम्परया चागताः मुद्रिताः के-चनामुद्रिताश्च वर्तन्ते। अतः सर्वेषामास्तिकमणीनां तत्त-दधिकारिणां सन्दर्भानुगुणं स्तोतुमनुसन्धानं च कर्तुं वय-मीदृशे कर्मणि प्रवृत्ताः स्मः। ततः एतेषु स्तोत्रेषु यदि पाठान्तराणि संप्रदायविरुद्धानि च वाचकानि कानिचित् सन्ति; तानि महाशयैः, अस्मदाचार्यानुगृहीतम् "शुना-लीढा कामं भवति सुरसिन्धुर्भगवती तदेषा किंभूता सपदि स तु सन्तापरहितः" इति न्यायमनुस्मृत्य "व्यङ्क्तुं क्षमाः सदसती विगताभ्यसूयाः सन्तः स्पृशन्तु सदयैः हृदयैः स्तुतिं ते" इति प्रार्थनामप्यनुसृत्य क्षन्तव्यानि इति प्रार्थयामो वयम्। अस्मिन् ग्रन्थे सर्वेषामानुकूल्यसम्पाद-नाय द्राविडाक्षरैरपि श्लोकाः मुद्रापिताः इति ज्ञापयामः इति शम्।

V. S. V. P.

முகவுரை.

"ஸ்தோத்ர ரத்னமாலா" என்ற இக்ரந்தம் பகவதநுபவம் ஏற்படுவதற்காக சில ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி புராணங்களிலிருந்தும் பல மஹான்களின் ஸ்தோத்ரங்களிலிருந்தும், அநுபவ பூர்வமாகவும், உபதேச பரம்பரையாக வந்ததைக்கொண்டும் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் தன் வாலைக்கொண்டு ஸமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டுபிடிக்க எண்ணங்கொண்ட நரியைப்போல சிற்றறிவுள்ள நாம் பகவத் கல்யாண குணங்களை விஸ்தாரமாக எழுதவோ, சொல்லவோ சக்தியற்றவர்களாகவிருக்கிறோம் என்பது ஸகலருக்கும் தெரிந்த விஷயமாகும். பல க்ரந்தங்களிலும், இதிஹாஸ புராணங்கள் வாயிலாகவும் நமது பெரியோர்கள் பகவத் குணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் சில ஸ்தோத்ரங்கள் அச்சில்லாமலிருக்கின்றன. ஆனதுபற்றி தற்காலம் பல புஸ்தகங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள அவகாசமில்லாததாலும், நம் காரியகௌரவத்தாலும் ஸங்க்ரஹமாக பக

வத் குணங்களைச் சொல்லி பகவதநுக்ர ஹத்தைப்பெற இப்புஸ்தகம் ஓர் உபயோக மாகும். அந்தந்த அதிகாரிகளுக்குத் தகுந் தபடி ஸங்க்ரஹமாகவும், விஸ்தாரமாகவும் ஸந்தர்ப்பத்துக்குத் தக்கபடி உபயோகப்படும் படி வ்யாஸர் பூர்வாசார்யர்கள் முதலிய பெரி யோர்கள் ஸ்தோத்ரங்களை எழுதியிருக்கிறார் கள். அவை பகவத் குணாநுபவத்திற்கு உப யோகமாகவிருக்கிறதன்றோ! ஆதலால் அதை நாம் ஸகலருக்கும் உபயோகமாகும்படி வெளியிட்டுள்ளோம். இவைகளில் பாட பேதத்தாலும் மற்றபிழையாலும் குறை ஏதா வது ஏற்படுமாயின், அதை ஆஸ்திகர்கள் பகவத் குணமென்ற கௌரவத்தைக்கொண்டு "சுநாஸீடா காமம் பவதி ஸு ரஹிந்துர் ப்க வதீ ததேஷா கிம்பூதா ஸபதி ஸ து ஸந்தா பரஹித:" என்ற ஆசார்யர்கள் காண்பித்த ந்யாயத்தை ஸ்மரித்துக்கொண்டும் "வ்யங்க் தும் க்ஷமா: ஸதஸதீ விகதாப்யஸூயா: ஸந்த: ப்ருசந்து ஸதயைர் ஹ்ருதயை: ஸ்துதிம் தே" என்றதை அநுஸரித்தும் பிழைகளை மன்னித்தருள்வார்கள் என்று நம்புகிறோம்.

कोटिकन्यादान ताताचार्यः

प्रथमतिरुमालिगै श्रीरङ्गम् ।

ஸ்ரீ:

ஸ்தோத்ர ரத்னமாலா

பாகம் I

அரிது, அரிது, மானிடராய் பிறத்தலரிது,
மானிடராய் பிறந்தனராகிலும்
கூன், குருடு, செவிடு, ஊமை,
பேடுகள் நீங்கி பிறத்தலரிது. ஔவை

நாம் பேடுகள் நீங்கி பகவத் குணத்தை தியான ரூபமாகவும், கானரூபமாகவும் கைங்கர்யரூபமாகவும் அனுபவிக்க பாத்திரமாகவும் கடமையுள்ளவர்களாக வும் இருக்கிறோம். ஆதலால் இந்த ஜென்மா முடிவ தற்குள், பிற்பாடு என்கிற எண்ணம் வைக்காமல் 'காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்' என்கிற பழ மொழிப்படி சரீரத்ருடம் இருந்து, இந்திரியங்கள் சக்திமிருக்கும்போதே இஹ, பர, ஸாதகமாகிற பக வத் குணத்தை அநுஸந்திக்கவேணுமென்ற அர்த் தத்தை உள்படுத்தியே ஆழ்வாரும், 'அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன்' என்றும்

வேத நூற், பிராயம் நூறு, மனிதர்தான்
புகுவரேலும்,
பாதியும் உறங்கிப்போகும், நின்றதில் பதினையாண்டு,

பேதைபாலகனதாகும், பிணி, பசி, மூப்புத்துன்பம், ஆதலால் பிறவிவேண்டேன், அரங்கமா நகருளானே

என்று பாடியிருப்பதை அநுஸரித்து நாமும் முந்திக் கொள்வோமாக.

காலையில் தூங்கி எழுந்ததும் பூமியில் காலை வைக்குமுன் नमः क्षितिधराय (நம: க்ஷிதிதராய) என்று சொல்லி ஆதிவராஹ மூர்த்தியை தியானம் செய்துகொண்டு பிறகு இடதுகாலை பூமியில் ஊன்றிக்கொண்டு,

नमोऽस्तु प्रियदत्तायै तुभ्यं देवि वसुंधरे ।
त्वं माता सर्वलोकानां पादन्यासं क्षमस्व मे ॥

நமோஸ்து ப்ரியதத்தாயை
துப்யம் தேவி வஸுந்தரே
த்வம் மாதா ஸர்வலோகானும்
பாதந்யாஸம் க்ஷமஸ்வ மே.

என்று சொல்லி பூமிபிராட்டியுடன் கூடிய வராஹமூர்த்தியை தியானம் செய்யவேணும். ஏனென்றால் நமக்கு ஸகல கார்யங்களுக்கும் ஆதாரமான பஞ்சபூத வஸ்துக்களில் பூமிதேவி ஓர் ப்ரதான தெய்வமாக இருக்கிறாளன்றோ! அந்த பூதேவதையை நாம் ப்ரார்த்திப்பது நமது கடமை என்று அதற்கு அதிதேவதையான ஆதிவராஹமூர்த்தியை பூதேவி ஸஹிதமாக த்யானம் செய்வது அவச்யம்.

பத்மஸரஸ்ஸில் தேவதைகளின் பிரார்த்தனை.

𑌦𑍇𑌵𑌾 𑌊𑌚𑍁𑌃—

𑌨𑌮𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌲𑍋𑌕𑌧𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑌦𑍍𑌮𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌯𑍈 𑌪𑌦𑍍𑌮𑌮𑍁𑌖𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

நம: ச்ரியை லோகதாத்ர்யை
ப்ரஹ்மமாத்ரே நமோ நம:
நமஸ்தே பத்மநேத்ராயை
பத்மமுக்யை நமோ நம:

உலகத்திற்குத் தாயான, பிரஹ்மாவுக்குத் தாயான, தாமரைபோன்ற முகத்தையுடைய, தாமரை இதழ்போன்ற கண்களையுடைய ஸ்ரீதேவியின் பொருட்டு நமஸ்காரம்.

𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑍁𑌖𑌪𑌦𑍍𑌮𑌾𑌯𑍈 𑌪𑌦𑍍𑌮𑌗𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑍋 𑌬𑌿𑌲𑍍𑌵𑌵𑌨𑌸𑍍𑌥𑌾𑌯𑍈 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

ப்ரஸன்ன முகபத்மாயை
பத்மகாத்ர்யை நமோ நம:
நமோ பில்வவநஸ்தாயை
விஷ்ணுபத்ந்யை நமோ நம:

ப்ரஸன்ன முகத்தையுடைய, தாமரைபோன்ற (அழகிய) திருமேனியையுடைய, பில்வவனத்தில்

வஸிக்கின்ற விஷ்ணுவின் பத்நியான ஸ்ரீதேவியின் பொருட்டு நமஸ்காரம்.

विचित्रक्षौमधारिण्यै पृथुश्रोण्यै नमो नमः ।
पक्वबिल्वफलापीनतुङ्गस्तन्यै नमो नमः ॥

விசித்ரக்ஷௌமதாரிண்யை
ப்ருதுச்ரோண்யை நமோ நம:
பக்வபில்வ பலாபீந
துங்கஸ்தந்யை நமோ நம:

அழகிய பட்டாடையை தரித்தவளும், அழகிய இடையையுடையவளும், பழுத்த பில்வப்பழம்போல் பருத்த அழகிய ஸ்தனங்களையுடையவளுமாகிய ஸ்ரீதேவியின்பொருட்டு நமஸ்காரம்.

सुरक्तपद्मपत्राभ-
करपादतले शुभे ।
सुरत्नाङ्गदकेयूर-
कांचीनूपुरशोभिते ॥

ஸுரக்த பத்மபத்ராப
கரபாததலே சுபே
ஸுரத்நங்கத கேயூர
காஞ்சீ நூபுரசோபிதே.

நன்கு சிவந்த தாமரைபோன்ற கைகளையும் பாதங்களையுமுடையவளே! ரத்னமயமான அங்கதம், கேயூரம் இவற்ருல் அலங்கரிக்கப்பட்டவளே! இடையில் ஒட்டியாணமும், காலில் தண்டைகளும் அணிந்தவளே! ஸ்ரீதேவியே! உன்பொருட்டு நமஸ்காரம்.

यक्षकर्दमसंलिप्त-
सर्वाङ्गे कटकोज्ज्वले ।
माङ्गल्याभरणैश्चित्रै-
र्मुक्ताहारैर्विभूषिते ॥

யக்ஷகர்தம ஸம்லிப்த
ஸர்வாங்கே கடகோஜ்வலே
மாங்கல்யாபரணைச் சித்ரைர்
முக்தாஹாரைர்விபூஷிதே.

வாஸனை பூசப்பட்ட சரீரத்தையுடையவளும், வளையல்கள் தரித்தவளும், பலவித அழகிய மங்களாபரணங்களும், முத்துஹாரமும் தரித்தவளுமாகிய ஸ்ரீதேவியின் பொருட்டு நமஸ்காரம்.

ताटङ्कैरवतंसैश्च शोभमानमुखाम्बुजे ।
पद्महस्ते नमस्तुभ्यं प्रसीद हरिवल्लभे ॥

தாடங்கைரவதம்ஸைச்ச
சோபமானமுகாம்புஜே

பத்மஹஸ்தே நமஸ்துப்யம்
ப்ரஸீத ஹரிவல்லபே.

தோடு தலையலங்காரம் இவற்ருல் அழகிய முகத் தோற்றத்தையுடையவளும், கையில் தாமரையுடையவளும், விஷ்ணுவின் தேவியுமான உன்பொருட்டு நமஸ்காரம், அருள்புரிவாயாக.

ऋग्यजुस्सामरूपायै
विद्यायै ते नमो नमः ।

ருக்யஜுஸ்ஸாமருபாயை
வித்யாயை தே நமோ நம:

ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், இவற்றின் ரூபமாகவும், வித்யாரூபமாகவும் விளங்குகின்றவளான ஸ்ரீதேவியின்பொருட்டு நமஸ்காரம்.

प्रसीदास्मान्कृपादृष्टि-
पातैरालोकयाब्धिजे ।
ये दृष्टास्ते त्वया ब्रह्म-
रुद्रेन्द्रत्वं समाप्नुयुः ॥

ப்ரஸீதாஸ்மாந் க்ருபாத்ருஷ்டி
பாதைராலோகயாப்திஜே
யே த்ருஷ்டாஸ்தே த்வயா ப்ரம்ஹ
ருத்ரேந்த்ரத்வம் ஸமாப்னுயு:

பாற்கடலில் அவதரித்த தேவியே! கருணை புரிவாயாக. அன்பு நிறைந்த கண்களால் பார்த்தருள்வாயாக. அவ்வாறு உமது க்ருபா கடாக்ஷத்தால் பார்த்தருளப்பட்டவர்கள் பிருமன், ருத்ரன், இந்திரன் இவர்களுக்குச் சமமாக ஆகிறார்கள்.

ஸ்ரீமத் பாகவதம்

महापुरुषस्तोत्रम् ॥

மஹாபுருஷ ஸ்தோத்ரம்

रेखारविन्दकलशध्वजशङ्खचक्र-
मीनातपत्रमृगलाञ्छनवज्रपाशैः ।
यल्लाञ्छितं सकलयोगिभिरर्चनीयं
वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

ரேகாரவிந்தகலசத்வஜ சங்கசக்ர
மீநாதபத்ர ம்ருகலாஞ்சநவஜ்ரபாசை:
யல்லாஞ்சிதம் ஸகலயோகிபிரர்ச்சநீயம்
வந்தே மஹாபுருஷ தே சரணாரவிந்தம்.

புருஷோத்தமனே! பத்மம், கலசம், த்வஜம், சங்கம், சக்ரம், மீன், குடை, சந்திரன், வஜ்ராயுதம், பாசம் இவைகளான ரேகைகளால் அலங்கரிக்கப்பட்

டதும், யோகிகள் அனைவராலும் அர்ச்சிக்கப்படுவது மான தேவரீருடைய திருவடித்தாமரைகளை நான் வணங்குகிறேன்.

प्रह्लादभक्तिपरिपालनपारिजातं
विश्वंभराभरणविश्रुतपुण्यतीर्थम् ।
क्षीरांबुराशितनयाङ्कनिषङ्गसौख्यं
वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

ப்ரஹ்லாத பக்தி பரிபாலந பாரிஜாதம்
விச்வம்பராபரண விச்ருத புண்யதீர்த்தம்
க்ஷீராம்புராசிதநயாங்க நிஷங்க ஸௌக்யம்
வந்தே மஹாபுருஷ தே சரணாரவிந்தம்.

புருஷோத்தமனே! ப்ரஹ்லாதனுடைய பக்தியை காக்கவந்த பாரிஜாதமும், பூதேவிக்கு அலங்காரமானதால் புகழ்பெற்றதும், புனிதமானதும், க்ஷீர ஸாகரத்தில் பிறந்த லக்ஷ்மிதேவியின் மடியின்மீது ஸுகமாக வீற்றிருப்பதுமான தேவரீருடைய திருவடித் தாமரைகளை நான் வணங்குகிறேன்.

त्यक्त्वा सुदुस्त्यजसुरेप्सितराज्यलक्ष्मीं
धर्मिष्ठ आर्यवचसा यदगादरण्यम् ।
मायामृगं दयितयेप्सितमन्वधाव-
द्वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

த்யக்த்வா ஸுதுஸ்த்யஜ ஸுரேப்ஸித
ராஜ்ய லக்ஷ்மீம்
தர்மிஷ்ட ஆர்யவசஸா யதகாதரண்யம்
மாயாம்ருகம் தயிதயேப்ஸிதமந்வதாவத்
வந்தே மஹாபுருஷ தே சரணாரவிந்தம்.

விடமுடியாததும் தேவர்களாலும் விரும்பத்தக்கதுமான ராஜ்ய ஐசுவரியத்தைத் துறந்து தர்மத்தை மேற்கொண்டு தேவரீர் தந்தையின் சொல்படி கானகம் சென்றீர். அங்கு தேவியால் விரும்பப்பட்ட மாய மானை பின்பற்றிச் சென்ற உமது திருவடித் தாமரைகளை நான் வணங்குகிறேன்.

यच्छौचनिस्सृतसरित्प्रवरोदकेन
तीर्थेन मूर्ध्नि विधृतेन शिवः शिवोऽभूत् ।
ध्यातुर्मनःशमलशैलविसृष्टवज्रं
ध्यायेच्चिरं भगवतश्चरणारविन्दम् ॥

யச்சௌசநிஸ்ஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந
தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந சிவ: சிவோபூத்
த்யாதுர்மந:சமலசைல விஸ்ருஷ்டவஜ்ரம்
த்யாயேச்சிரம் பகவதச்சரணாரவிந்தம்.

உம்முடைய திருவடியாகிற பரிசுத்தமானவிடத்தினின்றும் பெருகிவந்த சிரேஷ்டமான கங்காநதியின் ஜலத்தை சிரஸில் தரித்ததாலே சிவபெருமான்

மங்கள மூர்த்தியானுர். தியானிப்பவர்களின் மனக் கல்மஷத்தை போக்குவதற்கு விடப்பட்ட வஜ்ராயுதம் போன்ற தேவரீரது திருவடித் தாமரைகளை நான் வணங்குகிறேன்.

ध्येयं सदा परिभवघ्नमभीष्टदोहं
तीर्थास्पदं शिवविरिञ्चिनुतं शरण्यम् ।
भृत्यार्तिहं प्रणतपालभवाब्धिपोतं
वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

த்யேயம் ஸதா பரிபவக்நமபீஷ்டதோஹம்
தீர்த்தாஸ்பதம் சிவவிரிஞ்சினுதம் சரண்யம்
ப்ருத்யார்த்திஹம் ப்ரணதபால பவாப்திபோதம்
வந்தே மஹாபுருஷ தே சரணாரவிந்தம்.

எப்பொழுதும் தியானிக்கத்தக்கதும், நமக்கு ஏற்படும் அவமானத்தைப் போக்குகின்றதும், இஷ்டத்தை அளிப்பதும், நன்மைக்கு காரணமானதும், சிவன் பிரம்மா முதலானோரால் வணங்கப்பெற்றதும், அடியார்களின் துன்பங்களை போக்குகின்றதும், தஞ்சம் அடைபவர்களை ரக்ஷிக்கின்றதும், ஸம்ஸாரஸாகரத்தை கடப்பதற்கான ஓடம்போன்றதுமான உமது திருவடித்தாமரைகளை நான் வணங்குகின்றேன்.

संचिन्तयेद्भगवतश्चरणारविन्दं
वज्राङ्कुशध्वजसरोरुहलाञ्छनाढ्यम् ।
उत्तुङ्गरक्तविलसन्नखचक्रवाल-
ज्योत्स्नाभिराहतमहद्धृदयान्धकारम् ॥

ஸஞ்சிந்தயேத் பகவதச் சரணாரவிந்தம்
வஜ்ராங்குச த்வஜ ஸரோருஹ லாஞ்சநாட்யம்
உத்துங்கரக்த விலஸந்நக சக்ரவாள
ஜ்யோத்ஸ்நாபி ராஹதமஹத் ஹ்ருதயாந்தகாரம்

வஜ்ராயுதம், அங்குசம், த்வஜம், தாமரை இவைகளால் அலங்கரிக்கப்பட்டதும், சிவந்து விளங்கும் நகமண்டலத்தின் காந்தியால் மஹான்களின் மனதிலுள்ள அஞ்ஞானமாகிய இருளை போக்கக்கூடியதுமான, பகவானுடைய திருவடித் தாமரைகளை த்யானம் செய்யவேண்டும்.

मुक्तिप्रदं सकलयोगिमुनीन्द्रसौख्यं
तापत्रयानलनिवारणमात्मभूतम् ।
बृन्दावनस्थलविहारविनीतलीलं
वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

முக்திப்ரதம் ஸகலயோகி முநீந்த்ரஸௌக்யம்
தாபத்ரயாநலநிவாரணமாத்மபூதம்

ப்ருந்தாவனஸ்தல விஹார விநீதலீலம்
வந்தே மஹாபுருஷ தே சரணாரவிந்தம்.

மோக்ஷத்தை நல்குவதும், ஸகல யோகிகட்கும், முனிவர்கட்கும் ஸௌக்யத்தையளிப்பதும், மூன்று விதமான தாபத்தையும் போக்குகின்றதும், ப்ருந்தாவனத்தில் விளையாடுவதிலும், உல்லாஸமாக இருப்பதிலும் பிரியமுள்ளதுமான, உமது திருவடித்தாமரைகளை நான் வணங்குகிறேன்.

कुब्जाङ्गनाकुटिलदेहपटुत्वकारि
श्रीरुक्मिणीघनपयोधरकुङ्कुमाङ्कम् ।
श्रीवैनतेयकरपल्लवबद्धसौख्यं
वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

குப்ஜாங்கநாகுடில தேஹ படுத்வகாரி
ஸ்ரீ ருக்மிணீ கனபயோதர குங்குமாங்கம்
ஸ்ரீவைநதேய கரபல்லவ பத்தஸௌக்யம்
வந்தே மஹாபுருஷ தே சரணாரவிந்தம்.

கூனியின் உடலை சரியாகச் செய்ததும், ஸ்ரீ ருக்மிணீ தேவியின் பருத்த ஸ்தனங்கள் மீதுள்ள குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்டதும், கருடபகவானால் கைகூப்பி ஸௌக்கியமாக ஸேவிக்கப்பட்டதுமான

தேவரீருடைய திருவடித்தாமரைகளை நான் வணங்குகிறேன்.

इति श्रीमहापुरुषस्तोत्रम् ॥

இவ்வாறு ஸ்ரீ மஹாபுருஷஸ்தோத்ரம்.

अच्युताष्टकम् ॥

அச்யுதாஷ்டகம்

अच्युतं केशवं रामनारायणं
कृष्णदामोदरं वासुदेवं हरिम् ।
श्रीधरं माधवं गोपिकावल्लभं
देवकीनन्दनं नन्दजं सन्दधे ॥

அச்யுதம் கேசவம் ராமநாராயணம்
க்ருஷ்ணதாமோதரம் வாஸுதேவம் ஹரிம்
ஸ்ரீதரம் மாதவம் கோபிகாவல்லபம்
தேவகீநந்தனம் நந்தஜம் ஸந்ததே.

அச்யுதன், கேசவன், ராமன், நாராயணன், கிருஷ்ணன், கயிற்றால் வயிற்றில் கட்டுண்டவன், வஸுதேவன் புத்ரன், ஹரி, லக்ஷ்மியின் பர்த்தா, ஸீதாதேவியின் பதி, கோபிகாஸ்திரீகளுக்கு பிரியமானவன், இவ்வாறாகிய திருநாமங்களை உடைய தேவ

யின் புதல்வனும் நந்தகுமாரனுமான பகவானை தியானிக்கிறேன்.

अच्युतं केशवं सत्यभामाधवं
माधवं श्रीधरं राधिकाराधितम् ।
इन्दिरामन्दिरं चेतसा सुन्दरं
देवकीनन्दनं नन्दजं सन्दधे ॥

அச்யுதம் கேசவம் ஸத்யபாமாதவம்
மாதவம் ஸ்ரீதரம் ராதிகாராதிதம்
இந்திராமந்திரம் சேதஸா ஸுந்தரம்
தேவகீநந்தனம் நந்தஜம் ஸந்ததே.

அச்சுதன், கேசவன், ஸத்யபாமையின் புருஷன், ஸ்ரீதேவியின் பதி, ஸ்ரீதரன், ராதையினால் ஆராதிக்கப்பட்டவன், இந்திராதேவியின் இருப்பிடம் ஆகிய, அழகிய தேவகியின் புதல்வனான ஸ்ரீ கிருஷ்ணபகவானை மனதால் தியானிக்கிறேன்.

विष्णवे जिष्णवे शङ्खिने चक्रिणे
रुक्मिणीरागिणे जानकीजानये ।
वल्लवीवल्लभायार्चितायात्मने
कंसविध्वंसिने वंशिने ते नमः ॥

விஷ்ணவே ஜிஷ்ணவே சங்கினே சக்ரிணே
ருக்மிணீராகிணே ஜானகீஜாநயே

வல்லவீவல்லபாயார்ச்சிதாயாத்மநே
கம்ஸவித்வம்ஸிநே வம்சிநே தே நம:

விஷ்ணுவும், ஜயசீலனும், சங்கம், சக்ரம் இவைகளை தரித்தவனும், ருக்மிணீ தேவியின் அனுராகத் திற்கிசைந்தவனும், ஸீதாதேவியின் கணவனும், கோபிகாஸ்திரீகளுக்கு பிரியமானவனும், அர்ச்சிக்கப் பட்டவனும், கம்ஸனைக் கொன்றவனுமான, வேணு கானம் செய்கின்ற உம்பொருட்டு நமஸ்காரம்.

कृष्ण गोविन्द हे रामनारायण
श्रीपते वासुदेवाजित श्रीनिधे ।
अच्युतानन्त हे माधवाधोक्षज
द्वारकानायक द्रौपदीरक्षक ॥

க்ருஷ்ண கோவிந்த ஹே ராமநாராயண
ஸ்ரீபதே வாஸுதேவாஜித ஸ்ரீநிதே
அச்யுதாநந்த ஹே மாதவாதோக்ஷஜ
த்வாரகாநாயக த்ரௌபதீரக்ஷக.

கிருஷ்ணா! கோவிந்தா! ஹே ராமநாராயணா! ஸ்ரீபதியே! வஸுதேவன் புதல்வனே! தோல்வியற்றவனே! அச்சுதனே, அனந்தனே, மாதவனே, அதோக்ஷஜா, துவாரகைநாதனே, திரௌபதியை ரக்ஷித்தவனே, உம்பொருட்டு நமஸ்காரம்.

राक्षसक्षोभितः सीतया शोभितो
दण्डकारण्यभूपुण्यताकारणम् ।
लक्ष्मणेनान्वितो वानरैः सेवितो-
ऽगस्त्यसंपूजितो राघवः पातु माम् ॥

ராக்ஷஸக்ஷோபித: ஸீதயா சோபிதோ
தண்டகாரண்யபூபுண்யதாகாரணம்
லக்ஷ்மணேனாந்விதோ வானரை: ஸேவிதோ
அகஸ்த்யஸம்பூஜிதோ ராகவ: பாது மாம்.

அரக்கர்களைக் கொன்றவனும், ஸீதையுடன் கூடியவனும், தண்டகாரண்ய பிரதேசத்தின் புண்யத்திற்கு காரணமானவனும், லக்ஷ்மணனோடுகூடியவனும் வானரங்களால் ஸேவிக்கப்பட்டவனும், அகஸ்திய முனிவரால் பூஜிக்கப்பட்டவனுமாகிய ராமன் என்னை காப்பாற்றுவானாக.

धेनुकारिष्टहाऽनिष्टकृद्द्वेषिणां
केशिहा कंसहृद्वंशिकावादकः ।
पूतनामोक्षदः सूरजाखेलनो
बालगोपालकः पातु मां सर्वदा ॥

தேனுகாரிஷ்டஹா அநிஷ்டக்ருத் த்வேஷிணும்
கேசிஹா கம்ஸஹ்ருத்வம்சிகாவாதக:

பூதநாமோக்ஷத: ஸுப்ரஜாகேலநோ
பாலகோபாலக: பாது மாம் ஸர்வதா.

தேனுகன், அரிஷ்டன் இவர்களைக் கொன்றவனும், தன்னை த்வேஷிப்பவர்களுக்கு அனிஷ்டங்களைச் செய்பவனும், கேசியைக் கொன்றவனும், கம்ஸனைக் கொன்றவனும், வேணுகானம் செய்பவனும், பூதனைக்கு மோக்ஷமளித்தவனும், யமுனையில்க்ரீடை செய்தவனும் பாலகோபாலனுமான பகவான் எப்பொழுதும் என்னைக் காப்பாற்றுவாராக.

विद्युदुद्योतवत्प्रस्फुरद्वाससं
प्रावृडंभोदवत्प्रोल्लसद्विग्रहम् ।
वन्यया मालया शोभितोरःस्थलं
लोहिताङ्घ्रिद्वयं वारिजाक्षं भजे ॥

வித்யுதுத்யோதவத் ப்ரஸ்புரத்வாஸஸம்
ப்ராவ்ருடம்போதவத்ப்ரோல்லஸத்விக்ரஹம்
வந்யயா மாலயா சோபிதோர:ஸ்தலம்
லோஹிதாங்க்ரித்வயம் வாரிஜாக்ஷம் பஜே.

மின்னலின் பிரகாசம் போன்ற அழகிய பீதாம்பரத்தையுடையவரும், கார்மேகம்போன்ற அழகிய திருமேனியை உடையவரும், வனமாலையால் சோபிக்கின்ற மார்பையுடையவரும், சிவந்த இரு திருவடி

களையுடையவரும், தாமரைபோன்ற கண்களை உடைய வருமான ஸ்ரீ பகவானை நான் வணங்குகிறேன்.

कुञ्चितैः कुन्तलैर्भ्राजमानाननं
रत्नमौलिं लसत्कुण्डलं गण्डयोः ।
हारकेयूरकं कङ्कणप्रोज्ज्वलं
किङ्किणीमञ्जुलं श्यामलं तं भजे ॥

குஞ்சிதை: குந்தளைர்ப்ராஜமானாநநம்
ரத்நமௌளிம் லஸத்குண்டலம் கண்டயோ:
ஹாரகேயூரகம் கங்கணப்ரோஜ்வலம்
கிங்கிணீமஞ்சுளம் ச்யாமளம் தம் பஜே.

சுருண்ட கேசங்களால் அழகிய முகத்தையுடையவரும், ரத்னத்தை சிரஸ்ஸிலணிந்தவரும் கன்னங்களில் பிரகாசிக்கின்ற குண்டலங்களை உடையவரும், ஹாரம், கேயூரம், கங்கணம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், சிறுத்த சலங்கைகளை அணிந்து கருத்த திருமேனியையுடைய பகவானை நமஸ்கரிக்கிறேன்.

अच्युतस्याष्टकं यः पठेदिष्टदं
प्रेमतः प्रत्यहं पूरुषः सस्पृहम् ।
वृत्ततः सुन्दरं वेद्यविश्वम्भरं
तस्य वश्यो हरिर्जायते सत्वरम् ॥

அச்யுதஸ்யாஷ்டகம் ய: படேதிஷ்டதம்
ப்ரேமத: ப்ரத்யஹம் பூருஷ: ஸஸ்ப்ருஹம்
வ்ருத்தத: ஸுந்தரம் வேத்யவிச்வம்பரம்
தஸ்ய வச்யோ ஹரிர்ஜாயதே ஸத்வரம்.

தினந்தோறும் எவன் ஒருவன் மிகவும் பிரியத்துடனும், பக்தியுடனும், இஷ்டத்தையெல்லாம் கொடுக்கக்கூடியதும், உலகை தரிக்கின்ற பரமனை அறியப் படுத்துகிறதும், அழகிய விருத்தங்களையுடையதுமான இந்த அச்சுதாஷ்டகம் என்ற ஸ்தோத்ரத்தை சொல்லுகிறானோ, அவனுக்கு பகவான் வசமாகிறான்.

சுபம்

ஸ்ரீமத் பாகவதம்

श्रीकृष्णं प्रति रुक्मिणीप्रार्थना ।

ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்து ருக்மிணியின் பிரார்த்தனை.

கன்னிகைகள் பக்தியோடு பாராயணம் செய்ய நல்ல பதியை அடைவார்கள்.

श्रुत्वा गुणान्भुवनसुन्दर शृण्वतां ते
निर्विश्य कर्णविवरैर्हरतोऽङ्गतापम् ।

रूपं दृशां दृशिमतामखिलार्थलाभं
त्वय्यच्युताविशति चित्तमपत्रपं मे ॥

ச்ருத்வா குணான்புவநஸுந்தர ச்ருண்வதாம் தே
நிர்விச்ய கர்ணவிவரைர் ஹரதோங்கதாபம்
ரூபம் த்ருசாம் த்ருசிமதாமகிலார்த்தலாபம்
த்வய்யச்யுதாவிசதி சித்தமபத்ரபம் மே.

ஹே! புவனஸுந்தரா! அச்சுதா! கேட்பவர்க ளின் காதினுள் நுழைந்து தாபத்தைப் போக்குகின்ற உமது பக்தவாத்ஸல்யாதி சுபகுணங்களையும், கண் களைப் படைத்தவர்களுடைய கண்களுக்கு ஸகல புரு ஷார்த்தங்களையும் தந்தருளுகின்ற உமது ரூபத்தின் அழகையும் கேட்டு என்னுடைய மனது வெட்கத்தை விட்டு உம்மிடத்தில் ஈடுபடுகின்றது.

का त्वा मुकुन्द महती कुलशीलरूप-
विद्यावयोद्रविणधामभिरात्मतुल्यम् ।
धीरा पतिं कुलवती न वृणीत कन्या
काले नृसिंह नरलोकमनोभिरामम् ॥

கா த்வா முகுந்த மஹதீ குலசீலரூப
வித்யாவயோத்ரவிணதாமபிராத்மதுல்யம்
தீரா பதிம் குலவதீ ந வ்ருணீத கந்யா
காலே ந்ருஸிம்ஹ நரலோகமநோபிராமம்.

ஹே முகுந்த! மோக்ஷமென்ற புருஷார்த்தத்தை அளிப்பவனே! ஹே ந்ருஸிம்ஹ! நரச்ரேஷ்டனே! பல நல்ல குணங்கள் நிறைந்தவளும், சிறந்த புத்தி யுள்ளவளும், நற்குலத்தில் பிறந்தவளும், கன்னிப் பெண்ணுமாகிய என்னைப்போன்றவள் எவள்தான், நற்குலப்பிறப்பு, நல்ல ஸ்வபாவம், தேகம், நாக்கு, உதடு, நகம் முதலிய இடங்களில் அமைந்துள்ள அழகு, கலை அறிவு, எப்பொழுதும் புதிதான யௌவன வயதின் சோபை, தனம், காந்தி ஆகிய இவற்ருல் தனக்கே ஒப்பானவரும் மனுஷ்ய ஸமூகத்திற்கு மனோஹரராயுமிருக்கின்ற உம்மை விவாஹத்திற்குத் தகுந்த வயதில் பதியாக விரும்பாமலிருப்பாள்?

तस्मै भवान्खलु वृतः पतिरङ्ग जाया-
मात्मार्पितश्च भवतोऽत्र विभो विधेहि।
मा वीरभागमभिमर्शतु चैद्य आरा-
द्गोमायुवन्मृगपतेर्बलिमम्बुजाक्ष॥

தஸ்மே பவாந் கலு வ்ருத: பதிரங்க ஜாயா-
மாத்மார்பிதச்ச பவதோத்ர விபோ விதேஹி
மா வீரபாகமபிமர்சது சைத்ய ஆரா-
த்கோமாயுவந்ம்ருகபதேர்பலிமம்புஜாக்ஷ.

ஹே அங்க! ஹே விபோ! தாமரைக் கண்ணனே! ஆனதுபற்றி நீர் என்னுல் கணவனுக வரிக்

கப்பட்டிருக்கிறீர். என் ஆத்மாவும் உமக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே தேவரீர் இங்கு வந்து அருள்புரிந்து என்னை பத்னியாக ஏற்றுக் கொள்ளவேண்டும். சிங்கத்திற்கென ஏற்பட்டுள்ள பலியை குள்ளநரியானது அபகரித்துச் செல்வது போல் உமக்கென ஏற்பட்டுள்ள என்னை சீக்கிரமாக சிசுபாலன் தீண்டாவண்ணம் உடனே வந்து அருள் புரிவீராக.

(இல்லாவிட்டால் உம்மிடமுள்ள ஆசையினால் தேகத்தைத் தரித்துக்கொண்டிருக்குங்கால் சிசுபாலன் விரைவாக வந்து என்னைத் தொடுவானாகில் கொழுந்துவிட்டு எரியும் விரஹாக்னியே இத்தேகத்தைச் சாம்பலாக்கிவிடும். தாமரைபோன்ற உமதுகண்களையே தியானம் செய்கின்ற எனக்கு அச்சமயம் சிறிதும் கஷ்டம் தெரியாது. ஆனால் வீரனாகிய உமது பொருளை வீரனல்லாத சிசுபாலன் கைப்பற்றும்படி விட்டுவிட்டீர் என்ற அபகீர்த்தியே உமக்கு வந்துசேரும். ஆகவே அவ்வாறான அபகீர்த்தி வாராது நடந்துகொள்ளவேண்டியது உமது பொறுப்பும் கடமையுமாகும் என்பதைத் தெரிவித்து விட்டேன். இனி நடக்கவேண்டியது உமது இஷ்டத்தைச் சேர்ந்தது என்பது கருத்தாகும்.)

पूर्तेष्टदत्तनियमव्रतदेवविप्र-
गुर्वर्चनादिभिरलं भगवान्परेशः ।

आराधितो यदि गदाग्रज एत्य पाणिं
गृह्णातु मे न दमघोषसुतादयोऽन्ये ॥

பூர்த்தேஷ்ட தத்தநியமவ்ரததேவவிப்ர
குர்வர்ச்சநாதிபிரலம் பகவாந்பரேச:
ஆராதிதோ யதி கதாக்ரஜ ஏத்ய பாணிம்
க்ருஹ்ணாது மே ந தமகோஷஸுதாதயோந்யே.

அநேக ஜன்மங்களில் குளங்கள் வெட்டுதல், தண்ணீர்பந்தல் வைத்தல், அக்னிஹோத்ரங்களைச் செய்தல், ஸுவர்ணம் முதலியன தானம்செய்தல், புண்ணியதீர்த்தங்களுக்குச் சென்று நீராடுதல், க்ருச்ரம், சாந்த்ராயணம் முதலிய விரதங்களையனுஷ்டித்தல், தேவர்கள், பிராஹ்மணர்கள், குரு இவர்களைப் பூஜித்தல், முதலிய தர்மங்களால் ஸர்வபூதேசனுகிய பகவான் ஸ்ரீமந் நாராயணன் என்னுல் ஆராதிக்கப்பட்டது உண்மையானுல் ஸ்ரீகிருஷ்ணன் வந்து அருள்புரிந்து எனது கரம் பற்றவேண்டுமேயன்றி சிசுபாலன் முதலிய எவரும் என் கரம் பற்றலாகாது. (நான் செய்த புண்ணியங்களின் பலனுக எனக்கு இது ஏற்படவேண்டுமென்ற பிரார்த்தனை.)

श्वो भाविनि त्वमजितोद्वहने विदर्भान्
गुप्तः समेत्य पृतनापतिभिः परीतः ।

निर्मथ्य चैद्यमगधेन्द्रबलं प्रसह्य
मां राक्षसेन विधिनोद्वह वीर्यशुल्काम् ॥

ச்வோபாவிநி த்வமஜிதோத்வஹநே விதர்பாந்
குப்த: ஸமேத்ய ப்ருதநாபதிபி: பரீத:
நிர்மத்ய சைத்யமகதேந்த்ரபலம் ப்ரஸஹ்ய
மாம் ராக்ஷஸேந விதிநோத்வஹ வீர்யசுல்காம்.

ஹே அஜித! விவாஹம் நாளை நடக்கவிருக்க முதல்நாளே யாரும் காணாதபடி நீர் விதர்ப்பதேசம் வந்து, பின்னர் சேனாதிபதிகளால் சூழப்பட்டவராய் சிசுபாலன், ஜராஸந்தன் இவர்களுடைய சேனைகளை பலாத்காரமாக அழித்து உமது இயற்கையான மஹிமை வாய்ந்துள்ள வீர்யத்தையே கன்யாசுல்கமாகக் கொண்டு என்னை வீரர்களின் விவாஹ முறையில் மணம் செய்துகொள்ளும்.

अन्तःपुरान्तरचरीमनिहत्य बन्धूं-
स्त्वामुद्वहे कथमिति प्रवदाम्युपायम् ।
पूर्वेद्युरस्ति महती कुलदेवियात्रा
यस्यां बहिर्नववधूर्गिरिजामुपेयात् ॥

அந்த:புராந்தரசரீமநிஹத்ய பந்தூம்-
ஸ்த்வாமுத்வஹே கதமிதி ப்ரவதாம்யுபாயம்
பூர்வேத்யுரஸ்தி மஹதீ குலதேவியாத்ரா
யஸ்யாம் பஹிர்நவவதூர்கிரிஜாமுபேயாத்.

கன்னிமாடத்தின் (அந்தப்புரத்தின்) நடுவே ஸஞ்சரிக்கின்ற உன்னை உன் பந்துக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் நான் எவ்வாறு மணம் செய்து கொள்ளமுடியும் என்பீரேயாகில் அவ்விஷயத்தில் ஒரு யுக்தி சொல்லுகிறேன். கேளும்.

மணம் செய்துகொள்வதற்கான தினத்திற்கு முதல்நாளில் மங்களவாத்திய முழக்கத்துடன் கூடிய குலதேவியான மலைமகளின் தரிசன மஹோத்ஸவம் ஒன்று நடைபெறுவது உண்டு. அச்சமயம் புதிதாக மணம் செய்துகொள்ளும் கன்னிகை மலைமகளை பூஜித்து தரிசனம் செய்யவேண்டி நகரத்திற்கு வெளியே சென்றே தீரவேண்டும்.

यस्याङ्घ्रिपङ्कजरजःस्नपनं महान्तो
वाञ्छन्त्युमापतिरिवात्मतमोपहत्यै ।
यर्ह्यम्बुजाक्ष न लभेय भवत्प्रसादं
जह्यामसून्व्रतकृशान् शतजन्मभिः स्यात् ॥

யஸ்யாங்க்ரிபங்கஜரஜ:ஸ்நபநம் மஹாந்தோ
வாஞ்சந்த்யுமாபதிரிவாத்மதமோபஹத்யை
யர்ஹ்யம்புஜாக்ஷ ந லபேய பவத்ப்ரஸாதம்
ஜஹ்யாமஸூந்வ்ரதக்ருசாந்சதஜன்மபி:ஸ்யாத்.

தாமரைபோன்ற அழகிய கண்களை உடைய பகவானே! எந்த உம்முடைய திருவடிகளுடைய

தூளியின் ஸ்நாநத்தை உமா காந்தனாகிய பரம சிவன்போன்ற மகான்களான ஸாதுக்கள் தமது அஞ்ஞானத்தை போக்கிக்கொள்ளவேண்டி ஆசைப் படுகின்றனரோ, அத்தகைய உமது அருளை நான் அடையாமல் போவேனாகில், அப்பொழுதே விரதானுஷ்டானங்களால் மெலிந்த என் உயிரை மாய்த்துக்கொள்வேன். இவ்விதம் அநேக பிறப்பில் செய்யும் பொழுது உமது அருள் எனக்கு கிடைத்தே தீரும்.

॥ ब्रह्मादिदेवस्तुतिः ॥

ப்ராஹ்மாதிதேவஸ்துதி:

ஸ்ரீமத் பாகவதம்

8-வது ஸ்கந்தம் 5-வது அத்தியாயம்

श्रीशुकः—

इत्याभाष्य सुरान् वेधाः सह देवैररिन्दम ।
अजितस्य पदं साक्षाज्जगाम तमसः परम् ॥

तत्रादृष्टस्वरूपाय श्रुतपूर्वाय वै विभो ।
स्तुतिमब्रूत दैवीभिर्गीर्भिस्त्ववहितेन्द्रियः ॥

ஸ்ரீ சுக:—

இத்யாபாஷ்ய ஸுரான் வேதா: ஸஹ தேவை-
ரரிந்தம

அஜிதஸ்ய பதம் ஸாக்ஷாஜ்ஜகாம தமஸ: பரம்.

தத்ராத்ருஷ்டஸ்வருபாய ச்ருதபூர்வாய வை விபோ
ஸ்துதிமப்ருத தைவீபிர்கீர்பிஸ்த்வவஹிதேந்த்ரிய:

ஸ்ரீ சுகர் சொல்லுகிறார்:—

சத்ருக்களை நாசம் செய்பவனே! பிருஹ்ம தேவன் இவ்விதம் தேவர்களைப் பார்த்துச் சொல்லி விட்டு தேவர்களுடன் கூடியவராப் லோகாலோகங் களைக்காட்டிலும் புறம்பான தமஸ்ஸைக்காட்டிலும் பரமான ஹரியின் பதத்தை நேரில் அடைந்தார்.

பிரபுவே! அவ்விடத்தில் அடக்கப்பட்ட இந்தி ரியங்களையுடையவராக, காணப்படாத ஸ்வரூபத் தையுடையவரும், சாஸ்திரங்களின் மூலம் முதலில் கேட்டு அறியப்பட்டவருமான பகவானைக் குறித்து தைவிகமான வாக்குகளாலே ஸ்தோத்திரத்தைச் செய்தார்.

ब्रह्मा उवाच—

अविक्रियं सत्यमनन्तमाद्यं
गुहाशयं निष्कलमप्रतर्क्यम् ।

मनोऽग्रयानं वचसाऽनिरुक्तं
नमामहे देववरं वरेण्यम् ॥

அவிக்ரியம் ஸத்யமனந்தமாத்யம்
குஹாசயம் நிஷ்கலமப்ரதர்க்யம்
மநோக்ரயாநம் வசஸாநிருக்தம்
நமாமஹே தேவவரம் வரேண்யம்.

பிருஹ்மதேவன் சொல்லுகிறுர்—

அந்தமில்லாதவரும், எல்லாவற்றிற்கும் ஆதியி லிருப்பவரும், ஆனதாலே விகாரமற்றவரும், மூன்று காலங்களிலும் அழியாமலிருப்பவரும், மனதைக் காட்டிலும் கூட வேகமாகச் செல்லக்கூடியவரும், ஊகித்து அறியவும் முடியாமலிருப்பவரும், உபாதி ஸம்பந்தமற்றவரும், எல்லோருடைய உள்ளத்திலு மிருப்பவரும், வாக்கிற்கு எட்டாதவரும், தேவர் களுக்குள் சிறந்தவருமான பகவானை நமஸ்கரிக் கிறோம்.

विपश्चितं प्राणमनोधियात्मना-
मर्थेन्द्रियाभासमनिद्रमव्रणम् ।
छायातपौ यत्र न गृध्रपक्षौ
तमक्षरं खं त्रियुगं व्रजामहे ॥

விபச்சிதம் ப்ராணமநோதியாத்மநாம்
அர்த்தேந்த்ரியாபாஸமநித்ரமவ்ரணம்

சாயாதபேள யத்ர ந க்ருத்ரபக்ஷள
தமக்ஷரம் கம் த்ரியுகம் வ்ரஜாமஹே.

பிராணன், மனஸ், புத்தி, அஹங்காரம் இவற்றை அறிந்தவரும், சப்தம் முதலிய விஷயங்கள், அவற்றை அறியும் இந்த்ரியங்கள் இவற்றின் ரூபமாக தோற்றத்தை அடைகின்றவரும், ஆனால் அஞ்ஞான மற்றவரும், ஆகவே தேகமற்றவரும், நாசமற்றவரும், ஆகாயம்போல் எங்கும் நிறைந்திருப்பவரும், ஜீவனிடத்தில் பக்ஷபாதமுள்ள வித்யை, அவித்யை இவற்ருல் பாதிக்கப்படாதவரும், மூன்று யுகங்களிலும் அவதாரம் செய்கின்றவருமான, பகவானை சரணமாக அடைகிறோம்.

अजस्य चक्रं त्वजयेर्यमाणं
मनोमयं पञ्चदशारमाशु ।
त्रिणाभि विद्युच्चलमष्टनेमि
यदक्षमाहुस्तमृतं प्रपद्ये ॥

அஜஸ்ய சக்ரம் த்வஜயேர்யமாணம்
மநோமயம் பஞ்சதசாரமாசு
த்ரிணுபி வித்யுச்சலமஷ்டநேமீ
யதக்ஷமாஹுஸ்தம்ருதம் ப்ரபத்யே.

மாயையால் சுழற்றப்படுகின்றதும், மனதைப் ப்ரதானமாக உடையதும், பத்து இந்திரியங்கள்

ஐந்து பிராணன்கள், ஆகிய பதினைந்து ஆரங்களை யுடையதும், வேகமாகச் செல்லக்கூடியதும், மூன்று குணங்களைக் குடம்போல் நடுவில் உடையதும், மின்னல்போல் நிலைத்திராததும், மூலப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், பஞ்சதன்மாத்திரைகள், ஆகிய எட்டு நேமியையுடையதுமான ஜீவனுடைய சக்ரத்திற்கு ஆச்ரயமான ஸத்யஸ்வரூபனான பகவானை சரண மடைகிறேன்.

यदेकवर्णं तमसः परं त-
दलोकमव्यक्तमनन्तपारम् ।
आसांचकारोपसुपर्णमेन-
मुपासते योगरथेन धीराः ॥

யதேகவர்ணம் தமஸ: பரம் தத்
அலோகமவ்யக்தமனந்தபாரம்
ஆஸாம்சகாரோபஸுபர்ணமேநம்
உபாஸதே யோகரதேன தீரா:

ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாக உடையவரும், பிரக்ருதிக்கு மேல்பட்டவரும் கண்ணால் காணமுடியாதவரும், எவ்வித பேதங்களுமில்லாதவரும், தேசத்தாலும் காலத்தாலும் அளந்து அறியப்படாதவரும், ப்ரஹ்மஸ்வரூபியுமான எவர் பக்தர்களை ரக்ஷிக்கவேண்டி கருடன்மீது அமர்ந்து இருக்கின்

ருரோ, மேலும் புத்தியை தன்வசம் ஆக்குமின்ற வர்கள் யோகம் என்ற ரதத்தால் (உபாயத்தால்) எவரை உபாஸிக்கின்றனரோ அந்த பகவானை நமஸ் கரிக்கின்றேன்.

न यस्य कश्चातितितर्ति मायां
यया जनो मुह्यति वेद नार्थम् ।
तं निर्जितात्मात्मगुणं परेशं
नमामि भूतेषु समं चरन्तम् ॥

ந யஸ்ய கச்சாதிதிதர்தி மாயாம்
யயா ஜநோ முஹ்யதி வேத நார்த்தம்
தம் நிர்ஜிதாத்மாத்மகுணம் பரேசம்
நமாமி பூதேஷு ஸமம் சரந்தம்

எந்த மாயையினால் மனிதன் மோகத்தை யடைந்து ஆத்மஸ்வரூபத்தை அறியவில்லையோ, எந்த மாயையை ஒருவனும் எளிதில் கடந்து செல்ல முடியவில்லையோ, அத்தகைய மாயையையும் மாயை யின் குணங்களையும் ஜயித்தவரும், பரமேச்வரனும், சிருஷ்டிக்கப்பட்டவைகளில் ஸமமாக இருப்பவரு மான பகவானை நமஸ்கரிக்கக்கடவோம்.

इमे वयं यत्प्रिययैव तन्वा
सत्वेन सृष्टा बहिरन्तराविः ।

गतिं न सूक्ष्मामृषयश्च विद्महे
कुतोऽसुराद्या इतरप्रधानाः ॥

இமே வயம் யத்ப்ரியயைவ தந்வா
ஸத்வேன ஸ்ருஷ்டா பஹிரந்தராவி:
கதிம் ந ஸூக்ஷ்மாம்ருஷயச்ச வித்மஹே
குதோஅஸுராத்யா இதரப்ரதாநா:

தேவர்களாகிய நாங்களும், முனிவர்களும், பகவானுகிய தங்களுடைய ப்ரிய சரீரமான ஸத்வகுணத்தினுல் சிருஷ்டிக்கப்பட்டவர்களாக இருந்தபோதிலும், உள்ளத்திலும் வெளியிலும் பிரகாசித்தபோதிலும் ஸூக்ஷ்மரூபத்தை அறியாதவர்களாய் இருக்கிறோம். ரஜோகுண தமோ குணங்களால் சிருஷ்டிக்கப்பட்ட அசுரர்களும் மற்றவர்களும் தங்களை எப்படி அறிவார்கள்? அத்தகைய பகவானை நமஸ்கரிக்கின்றோம்.

पादौ महीयं स्वकृतैव यस्य
चतुर्विधो यत्र हि भूतसर्गः ।
स मे महापूरुष आत्मतन्त्रः
प्रसीदतां ब्रह्म महाविभूतिः ॥

பாதௌ மஹீயம் ஸ்வக்ருதைவ யஸ்ய
சதுர்விதோ யத்ர ஹி பூதஸர்க:
ஸ மே மஹாபூருஷ ஆத்மதந்த்ர:
ப்ரஸீததாம் ப்ரஹ்ம மஹாவிபூதி:

ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், என்ற நான்கு வித ஸ்ருஷ்டியுடன் கூடிய பூமியே எந்த பகவானுடைய பாதங்களாக இருக்கின்றனவோ, பிறருக்குஉட்படாதவரும், மஹத்தான ஐசுவரியத்தையுடையவரும், அழியாத ஸ்வரூபமுள்ளவரும், மஹாபுருஷனுமாகிய அந்த பகவான் எனக்கு அருள் புரிவாராக.

अम्भस्तु यद्रेत उदारवीर्यं
सिध्यन्ति जीवन्त्युत वर्धमानाः ।
लोकास्त्रयोऽथाखिललोकपालाः
प्रसीदतां ब्रह्म महाविभूतिः ॥

அம்பஸ்து யத்ரேத உதாரவீர்யம்
ஸித்யந்தி ஜீவந்த்யுத வர்த்தமாநா:
லோகாஸ்த்ரயோऽதாகிலலோகபாலா:
ப்ரஸீததாம் ப்ரஹ்ம மஹாவிபூதி:

எந்த பகவான் ஜலத்திலிருந்து மூன்று உலகங்களையும், லோகபாலர்களையும், உண்டாக்கவும், ஜீவிக்கவும், விருத்தியடையவும் செய்கின்றாரோ, ஜலமானது எந்த பகவானுடைய அதிக சக்திவாய்ந்த வீர்யமோ, அழியாத ஸ்வரூபத்தையும், மஹத்தான ஐசுவர்யத்தையும் உடைய அத்தகைய பரப்ரஹ்மம் அருள் புரிவாராக.

सोमं मनो यस्य समामनन्ति
दिवौकसां यो बलमन्ध आयुः ।
ईशो नगानां प्रजनः प्रजानां
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

ஸோமம் மநோ யஸ்ய ஸமாமனந்தி
திவௌகஸாம் யோ பலமந்த ஆயு:
ஈசோ நகானும் ப்ரஜந: ப்ரஜாநாம்
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

தேவர்களுக்கு அன்னமாகவும், பலமாகவும், ஆயுளாகவும் இருப்பவனும், மரங்களுக்கு அதிபனும், ப்ரஜைகளை விசேஷமாக உண்டாக்குபவனுமான சந்திரனை மனதாக உடையவரும், மஹத்தான ஐசுவரியத்தை உடையவருமான பகவான் எங்கள் விஷயத்தில் அருள் புரிவாராக.

अग्निर्मुखं यस्य तु जातवेदा
जातः क्रियाकाण्डनिमित्तजन्मा ।
अन्तः समुद्रे तु पचन्स्वधातून्
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

அக்னிர்முகம் யஸ்ய து ஜாதவேதா:
ஜாத: க்ரியாகாண்டநிமித்தஜன்மா

அந்த: ஸமுத்ரே து பசந் ஸ்வதாநூன்
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

தனத்தை உண்டுபண்ணுகின்றவரும், வேதத்தின் கர்மகாண்டங்களில் கூறியுள்ள கர்மாக்களின் நிமித்தமாக பிறப்பையடைந்தவரும் வயிற்றினுள் பாகம் செய்வதற்குத் தகுதியானவற்றையே அடிக்கடி பாகம் செய்கின்றவரும், ஸமுத்திரத்திலும் படபாமுகாக்னியாக இருந்து தண்ணீரை பாகம் செய்கின்றவருமான அக்னி பகவானை முகமாக உடையவரும், மஹத்தான ஐசுவரியத்தையுடையவருமான பகவான் எங்கள் விஷயத்தில் அருள் புரிவாராக.

यच्चक्षुरासीत्तरणिर्देवयानं
त्रयीमयो ब्रह्मण एष धिष्ण्यम् ।
द्वारं च मुक्तेरमृतं च मृत्युः
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

யச்சக்ஷுராஸீத்தரணிர்தேவயானம்
த்ரயீமயோ ப்ரஹ்மண ஏஷ திஷ்ண்யம்
த்வாரம் ச முக்தேரம்ருதம் ச ம்ருத்யு:
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

அர்ச்சிராதி மார்க்கத்திற்கு அதிதேவதையும், மூன்று வேதங்களின் ஸ்வரூபமானவரும், பிரஹ்மோ

பாஸனத்திற்கு ஸ்தானமானவரும், முக்திக்கு வழியாக விளங்குகின்றவரும், அமிர்தரூபியும், மிருத்யுவுமான சூரியனைக்கண்ணாக உடையவரும், மஹத்தான ஐசுவரியத்தையுடையவருமான பகவான் எங்கள்பால் அருள் புரிவாராக.

प्राणादभूद्यस्य चराचराणां
प्राणः सहो बलमोजश्च वायुः ।
अन्वास्म सम्राजमिवानुगा वयं
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

ப்ராணாதபூத் யஸ்ய சராசராணாம்
ப்ராணஸ்ஸஹோ பலமோஜச்ச வாயு:
அந்வாஸ்ம ஸம்ராஜமிவானுகா வயம்
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

புத்தி முதலானவைகளுக்கு அதிஷ்டான தேவர்களாகிய நாங்கள் சக்ரவர்த்தியை வேலைக்காரர்கள் பின்பற்றுவது போல் ப்ராணனுக்கு அதிஷ்டான தேவதையாகிய எந்த வாயுவை அனுஸரித்து வருகின்றோமோ, எவர் சராசரங்களான பிராணிகளுக்குப் பிராணனையும் மனதின் உத்ஸாஹசக்தியையும், சரீர பலத்தையும், இந்திரியங்களின் வன்மையையும் தருகின்றாரோ, அந்த வாயு எந்த பகவானுடைய பிராணனிடத்திலிருந்து உண்டானாரோ, அத்தகைய மஹத்

தான ஐசுவரியத்தையுடைய ப்கவான் எங்களிடத்து அருள் புரிவாராக.

श्रोत्रादिशो यस्य हृदश्च खानि
प्रजज्ञिरे खं पुरुषस्य नाभ्याः ।
प्राणेन्द्रियात्मासुशरीरकेतं
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

ச்ரோத்ராத்திசோ யஸ்ய ஹ்ருதச்ச காநி
ப்ரஜஜ்ஜிரே கம் புருஷஸ்ய நாப்யா:
ப்ராணேந்த்ரியாத்மாஸுசரீர கேதம்
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

எந்த புருஷனுடைய காதிலிருந்து திக்குகளும், ஹ்ருதயத்திலிருந்து சரீரத்திலுள்ள துவாரங்களும், நாபியிலிருந்து பிராணன் இந்திரியங்கள் மனது நாகாதிப்ராணன்கள் சரீரம் இவைகளுக்கு ஆச்ரயமான ஆகாசமும் உண்டாயிற்றோ, அத்தகைய மஹத்தான ஐசுவரியத்தையுடைய பகவான் எங்கள் பால் அருள் புரிவாராக.

बलान्महेन्द्रस्त्रिदशाः प्रसादा-
न्मन्योर्गिरीशो धिषणाद्विरिञ्चः ।
खेभ्यश्च छन्दांस्यृषयो मेढ्रतः कः
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

பலாந்மஹேந்த்ரஸ்த்ரிதசா: ப்ரஸாதாத்
மந்யோர்கிரீசோ திஷணாத்விரிஞ்ச:
கேப்யச்ச சந்தாம்ஸ்ய்ருஷயோ மேட்ரத: க:
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

எவருடைய பலத்திலிருந்து மஹேந்திரனும், அருளிலிருந்து தேவர்களும், கோபத்திலிருந்து கிரீசனும், புத்தியிலிருந்து பிரும்ஹதேவனும், இந்த்ரியங்களிலிருந்து வேதங்களும் ரிஷிகளும், மேட்ரத்தி (ஆண்குறியி)லிருந்து பிரஜாபதியும் உண்டானார்களோ, மஹத்தான ஐசுவரியத்தை யுடைய அந்த பகவான் எங்களிடத்து அருள் வாராக.

श्रीर्वक्षसः पितरश्छाययाऽऽस-
न्धर्मः स्तनादितरः पृष्ठतोऽभूत् ।
द्यौर्यस्य शीर्ष्णोऽप्सरसो विहारा-
त्प्रसीदतां नस्स महाविभूतिः ॥

ஸ்ரீர்வக்ஷஸ: பிதரச்சாயயாஸந்
தர்ம: ஸ்தநாதிதர: ப்ருஷ்டதோऽபூத்
த்யௌர்யஸ்ய சீர்ஷ்ணோऽப்ஸரஸோ விஹாராத்
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

எவருடைய மார்பிலிருந்து லக்ஷ்மீதேவியும், நிழலிலிருந்து பிதுர்தேவதைகளும், ஸ்தனத்தி

விருந்து தர்மமும், பிருஷ்டபாகத்திலிருந்து அதர்மமும், தலையிலிருந்து ஸ்வர்க்கமும், விளையாட்டிலிருந்து அப்ஸரஸ்ஸுகளும் உண்டாயினரோ, மஹத்தான ஐசுவரியத்தையுடைய அந்த பகவான் எங்கள் விஷயத்தில் அருள் புரிவாராக.

विप्रो मुखाद्ब्रह्म च यस्य गुह्यं
राजन्य आसीद्भुजयोर्बलं च ।
ऊर्वोर्विडोजोऽङ्घ्रिरवेदशूद्रौ
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

விப்ரோ முகாத்ப்ரஹ்ம ச யஸ்ய குஹ்யம்
ராஜந்ய ஆஸீத் புஜயோர்பலம் ச
ஊர்வோர்விடோஜோऽங்க்ரிரவேதசூத்ரௌ
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

பிராஹ்மணனும், ரஹஸ்யமான வேதங்களும், எவருடைய முகத்திலிருந்தும், க்ஷத்திரியனும் பலமும் எவருடைய புஜங்களினின்றும், திறமை என்ற வ்ருத்தியையுடைய வைசியன் எவருடைய துடையிலிருந்தும், வேத ஸம்பந்தமில்லாத சுச்ருஷா வ்ருத்தியும் சூத்திரனும் எவருடைய கால்களிலிருந்தும் உண்டாயினரோ, மஹத்தான ஐசுவரியத்தை உடைய அந்த பகவான் எங்களிடத்தில் அருள் புரிவாராக.

लोभोऽधरात्प्रीतिरुपर्यभूद्द्युति-
र्नस्तः पशव्यः स्पर्शेन कामः ।
भ्रुवोर्यमः पक्ष्मभवस्तु कालः
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

லோபோऽதராத் ப்ரீதிருபர்யபூத்த்யுதிர்
நஸ்த: பசவ்ய: ஸ்பர்சேந காம:
ப்ருவோர்யம: பக்ஷ்மபவஸ்து கால:
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

எவருடைய கீழுதட்டிலிருந்து லோபமும், மேலுதட்டிலிருந்து ப்ரீதியும் மூக்கிலிருந்து காந்தியும், ஸ்பர்சம் என்ற குணத்திலிருந்து பசுக்களுக்கு ஹிதமான காமமும், புருவங்களிலிருந்து யமனும் இமைமயிர்களிலிருந்து காலனும் உண்டாயினவோ, மஹத்தான ஐசுவரியத்தை உடைய அந்த பகவான் எங்கள் விஷயத்தில் அருள் புரிவாராக.

द्रव्यं वयः कर्म गुणान्विशेषं
यद्योगमायाविहितान् वदन्ति ।
यद्दुर्विभाव्यं प्रबुधापबाधं
प्रसीदतां नस्स महाविभूतिः ॥

த்ரவ்யம் வய: கர்ம குணுந் விசேஷம்
யத்யோகமாயாவிஹிதாந் வதந்தி
யத்துர்விபாவ்யம் ப்ரபுதாபபாதம்
ப்ரஸீததாம் நஸ்ஸ மஹாவிபூதி:

எக்காரணத்தினுல் த்ரவ்யம் முதலிய யாவையும் ஞானிகளால் உண்மையானதன்று என விலக்கப்படுகின்றதாகவும், நிர்ணயிக்கமுடியாததாகவும் இருக்கின்றனவோ, ஆனது பற்றி திரவ்யமான பிருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் ஆகிய பூதங்களையும் ஆயுட் காலத்தையும், கர்மத்தையும் சப்தம், ஸ்பர்சம் முதலிய குணங்களையும் பௌதிகமான பிரபஞ்சத்தையும், எந்த பகவானுடைய யோக மாயையினுல் செய்யப்பட்டனவாகச் சொல்லப்படுகின்றதோ, மஹத்தான ஐசுவரியத்தையுடைய அந்த பகவான் எம்மிடம் அருள் புரிவாராக.

नमोऽस्तु तस्मा उपशान्तशक्तये
स्वाराज्यलाभप्रतिपूरितात्मने ।
गुणेषु मायारचितेषु वृत्तिभि-
र्नसज्जमानाय नभस्वदूतये ॥

நமோஸ்து தஸ்மா உபசாந்தசக்தயே
ஸ்வாராஜ்யலாபப்ரதிபூரிதாத்மநே
குணேஷு மாயாரசிதேஷு வ்ருத்திபிர்-
நஸஜ்ஜமாநாய நபஸ்வதூதயே.

சாந்தமான சக்தியையுடையவரும், ஆத்மலாபத்தால் பூர்ணமான ஸ்வரூபத்தையுடையவரும், மாயையால் செய்யப்பட்டவைகளான குணங்களில் தரிசனம் முதலிய விருத்திகளால் சேர்க்கையை அடையாதவரும், வாயுவினுடையது போன்ற லீலையை உடையவருமான அந்த பகவானுக்கு நமஸ்காரம்.

स त्वं नो दर्शयात्मानमस्मत्करणगोचरम् ।
प्रपन्नानां दिदृक्षूणां सस्मितं ते मुखाम्बुजम् ॥

ஸ த்வம் நோ தர்சயாத்மாநமஸ்மத்கரண
கோசரம்
ப்ரபந்நாநாம் தித்ருக்ஷூணும் ஸஸ்மிதம் தே முகா
ம்புஜம்.

அத்தகைய தேவரீர் புன்சிரிப்புடன் கூடிய உமது முகாரவிந்தத்தைக்காண விருப்பமுடையவர்களும், பிரபன்னர்களுமான எங்களுக்கு உமது ரூபத்தை எங்களுடைய இந்த்ரியங்களால் காணும்படி அருள் புரிவீராக.

तैस्तैः स्वेच्छाधृतै रूपैः काले काले स्वयं विभो ।
कर्म दुर्विषहं यन्नो भगवांस्तत्करोति हि ॥

தைஸ்தை: ஸ்வேச்சாத்ருதை: ரூபை: காலே
காலே ஸ்வயம் விபோ
கர்ம துர்விஷஹம் யந்நோ பகவாம்ஸ்தத்
கரோதி ஹி.

ஹே விபோ! தேவரீர் உமது ஸங்கல்ப மாத்திரத்தினுலேயே எடுத்துக்கொண்ட அந்தந்த ரூபங்களினுலே எங்களால் செய்யமுடியாத கார்யம் யாவற்றையும் அந்தந்த காலங்களில் ஸ்வயமாகவே செய்கின்றீர்.

क्लेशभूर्यल्पसाराणि कर्माणि विफलानि वा ।
देहिनां विषयार्तानां न तथैवार्पितं त्वयि ॥

க்லேசபூர்யல்பஸாராணி கர்மாணி விபலாநி வா
தேஹிநாம் விஷயார்தாநாம் ந ததைவார்பிதம் த்வயி

விஷயங்களால் (சிற்றின்பங்களால்) பீடிக்கப் பட்டவர்களான ஜீவர்களுடைய கர்மங்கள் கஷ்டம் நிறைந்தவைகளாகவும், அற்ப பயனுடையவைகளாக வும் அல்லது பயனற்றவைகளாகவும் இருக்கின்றன. ஆனுல் உம்மிடத்து அர்ப்பிக்கப்பட்ட கர்மாக்களோ வெனில் அத்தகையவையல்ல.

नावमः कर्मकल्पोऽपि विफलायेश्वरार्पितः ।
कल्पते पुरुषस्यैष स ह्यात्मा दयितो हितः ॥

நாவம: கர்மகல்போऽபி விபலாயேச்வரார்பித:
கல்பதே புருஷஸ்யைஷ ஸ ஹ்யாத்மா தயிதோ ஹித:

அற்பமாய் கர்மம்போல் தோன்றும் பொய்யான கர்மம் கூட எந்த பகவானிடத்தில் அர்ப்பிக்கப்பட்டால் பயனற்றதாகப்போவதில்லையோ, அத்தகைய பகவான் ஜீவனுடைய ஆத்மா ஆனதுபற்றி பிரியமானவரும் ஹிதமானவருமாகிறார்.

यथा हि स्कन्धशाखानां तरोर्मूलावसेचनम् ।
एवमाराधनं विष्णोः सर्वेषामात्मनश्च हि ॥

யதா ஹி ஸ்கந்தசாகாநாம் தரோர்மூலா
வஸேசநம்
ஏவமாராதநம் விஷ்ணோ: ஸர்வேஷாமாத்மநச்ச
ஹி

வேரின் அடிபாகத்தில் ஊற்றப்பட்ட ஜலமானது எவ்விதம் மரத்திற்கும் அதன் பெரிய கிளைகளுக்கும் சிறிய கிளைகளுக்கும் பயன் தருகின்றதோ, அவ்விதமே ஸ்ரீவிஷ்ணுவின் ஆராதனமானது எல்லோருக்கும் தனக்கும் பயன்தருவதாயிருக்கிறது.

नमस्तुभ्यमनन्ताय दुर्वितर्क्यात्मकर्मणे ।
निर्गुणाय गुणेशाय सत्त्वस्थाय च साम्प्रतम् ॥

நமஸ்துப்யமநந்தாய துர்விதர்க்யாத்மகர்மணே
நிர்குணாய குணேசாய ஸத்வஸ்தாய ச ஸாம்ப்ரதம்

எல்லையற்றவரும் ஆலோசித்து அறியமுடியாத கர்மங்களையுடையவரும், உண்மையில் நிர்குணமாக இருப்பவரும், குணங்களுக்கு நியந்தாவானவரும், இப்பொழுது ஸத்வகுணத்திலிருப்பவருமான தேவரீருக்கு நமஸ்காரம்.

इति ब्रह्मादिदेवस्तुतिः ।

இவ்வாறு ப்ரஹ்மா முதலிய தேவர்களால் செய்யப்பட்ட பகவானைப்பற்றிய துதிகள்.

श्रीकृष्णकर्णामृतम्

ஸ்ரீ கிருஷ்ணகர்ணாம்ருதம்

चिन्तामणिर्जयति सोमगिरिर्गुरुर्मे
शिक्षागुरुश्च भगवान् शिखिपिञ्छमौलिः ।
यत्पादकल्पतरुपल्लवशेखरेषु
लीलास्वयंवररसं लभते जयश्रीः ॥

சிந்தாமணிர்ஜயதி ஸோமகிரிர்குருர்மே
சிக்ஷாகுருச்ச பகவாந் சிகிபிஞ்ச மௌளி:
யத்பாதகல்பதருபல்லவசேகரேஷு
லீலாஸ்வயம்வரரஸம் லபதே ஜயச்ரீ:

(ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம் ஸ்ரீராம கர்ணாம்ருதம் இவ்விரண்டும் மிகவும் விரிவாக இருக்கிறபடியால் இச்சிறு நூலில் த்யானத்திற்கு அவசியமான சில சுலோகங்கள் மட்டும் தமிழுரையுடன் எழுதப்பட்டிருக்கிறது.)

எனது குருவான ஸோமகிரி நினைத்ததை எல்லாம் அளிக்கக்கூடிய சிந்தாமணி அதிக மேன்மையாக விளங்குகிறார். மயில் தோகையை சிரஸில் தரித்து அந்தர்யாமியாயிருந்து எனக்கு சிக்ஷாகுருவான பகவான் அதிக மேன்மையுடன் விளங்குகிறார். எவர்களுடைய பாதங்களாகிற கல்பகவிருக்ஷத்தின் துளிர்களில் ஜயஸ்ரீயானது அன்புடன் தானே வரிப்பதாலுண்டான ஆனந்தத்தை அடைகின்றதோ.

अस्ति स्वस्तरुणीकराग्रविगलत्कल्पप्रसूनाप्लुतं
वस्तु प्रस्तुतवेणुनादलहरीनिर्वाणनिर्व्याकुलम् ।
स्रस्तस्रस्तनिरुद्धनीविविलसद्गोपीसहस्रावृतं
हस्तन्यस्तनतापवर्गमखिलोदारं किशोराकृति ॥

அஸ்தி ஸ்வஸ்தருணீகராக்ரவிகலத்கல்ப
ப்ரஸூநாப்லுதம்
வஸ்து ப்ரஸ்துதவேணுநாதலஹரீநிர்வாண
நிர்வ்யாகுலம்

ஸ்ரஸ்தஸ்ரஸ்தநிருத்தநீவிவிலஸத்கோபீ
ஸஹஸ்ராவ்ருதம்

ஹஸ்தந்யஸ்தநதாபவர்கமகிலோதாரம்
கிசோராக்ருதி

ஸ்வர்கலோகத்துப் பெண்களின் நுனிக்கைகளால் ஸமர்ப்பிக்கப்பட்ட கல்பகவிருக்ஷத்தின் புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டவனும், ஆரம்பிக்கப்பட்ட வேணுகானத்தின் அமிருதம் போன்ற நாதத்தால் ஏற்படும் சௌக்யத்தால் அசைவற்றிருப்பவனும், நழுவிய வஸ்திரங்களை கைகளால் பிடித்துக் கொண்டிருக்கும் அநேக கோபிகாஸ்திரீகளால் சூழப்பட்டவனும், வணங்கியவர்களுக்கு கொடுக்க மோக்ஷத்தைக்கையில் கொண்டிருப்பவனும், எல்லா விதங்களிலும் சிரேஷ்டனுமான பாலகிருஷ்ணன் அதிக மேன்மையுடன் விளங்குகிறான்.

चातुर्यैकनिधानसीमचपलापाङ्गच्छटामन्थरं
लावण्यामृतवीचिलालितदृशं लक्ष्मीकटाक्षादृतम् ।
कालिन्दीपुलिनाङ्गणप्रणयिनं कामावताराङ्कुरं
बालं नीलममी वयं मधुरिमस्वाराज्यमाराध्नुमः ॥

சாதுர்யைகநிதாநஸீமசபலா-
பாங்கச்சடாமந்தரம்

லாவண்யாம்ருதவீசிலாலிதத்ருசம்
லக்ஷ்மீகடாக்ஷாத்ருதம்

காளிந்தீபுளிநாங்கணப்ரணயிநம்
காமாவதாராங்குரம்
பாலம் நீலமமீ வயம் மதுரிம-
ஸ்வாராஜ்யமாராத்நும:

சாதுர்யத்திற்கு இருப்பிடமான, சுழன்று பார்க்கும் கடாக்ஷத்தை உடையவனும், லாவண்யம் என்கிற அலைகளாலே சீராட்டப்பட்ட அழகிய கண்களை உடையவனும், லக்ஷ்மியின் கடாக்ஷத்தினால் ஆதரிக்கப்பட்டவனும், யமுனாநதியின் மணல்வெளிகளில் விளையாடுவதிலேயே பிரியமுள்ளவனும், காமதேவன் உண்டாவதற்கு காரணமாக இருப்பவனும், எல்லாவித ஸௌந்தர்யங்களுக்கும் ஸ்வர்கம்போல் இருப்பிடமானவனும், கருத்த திருமேனியையுடையவனுமான பாலனாக விளங்கும் பகவானை நாம் ஆராதிப்போமாக.

बर्होत्तंसविलासिकुन्तलभरं माधुर्यमग्नाननं
प्रोन्मीलन्नवयौवनं प्रविलसद्वेणुप्रणादामृतम् ।
आपीनस्तनकुड्मलाभिरभितो गोपीभिराराधितं
ज्योतिश्चेतसिनश्चकास्ति जगतामेकाभिरामाद्भुतम्

பர்ஹோத்தம்ஸவிலாஸிகுந்தளபரம்
மாதுர்யமக்நாநநம்
ப்ரோந்மீலந்நவயௌவநம்
ப்ரவிலஸத்வேணுப்ரணாதாம்ருதம்

ஆபீநஸ்தனகுட்மலாபிரபிதோ
கோபீபிராராதிதம்
ஜ்யோதிச்சேதஸி நச்சகாஸ்தி
ஜகதாமேகாபிராமாத்புதம்.

மயில் தோகையால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கூந்தலை உடையவனும், இனிமைநிறைந்த முகத்தை உடையவனும், புதியதான யௌவனத்தை உடையவனும், அமிருதம்போன்ற வேணுகானத்தின் நாதத்தை உடையவனும், தாமரைமொட்டைப் போன்ற பருத்த அழகிய ஸ்தனங்களைக் கொண்ட கோபிகா ஸ்திரீகளினால் ஆராதிக்கப்பட்டவனும், உலகிற்கே அற்புத ஜ்யோதியாக விளங்கும் பகவான் என் மனதில் பிரகாசிக்கிறார்.

मधुरतरस्मितामृतविमुग्धमुखाम्बुरुहं
मदशिखिपिञ्छलाञ्छितमनोज्ञकचप्रचयम् ।
विषयविषामिषग्रसनगृध्नुनि चेतसि मे
विपुलविलोचनं किमपि धाम चकास्ति चिरम् ॥

மதுரதரஸ்மிதாம்ருதவிமுக்தமுகாம்புருஹம்
மதசிகிபிஞ்சலாஞ்சிதமநோஜ்ஞகசப்ரசயம்
விஷயவிஷாமிஷக்ரஸநக்ருத்நுநி சேதஸி மே
விபுலவிலோசநம் கிமபி தாம சகாஸ்தி சிரம்.

மிகவும் இனியதான அமிருதம் போன்ற புன்சிரிப்பாலே அழகிய தாமரைபோன்ற திருமுகத்தையுடையவனும், மதங்கொண்ட மயிலின் தோகையாலே அலங்கரிக்கப்பட்ட அழகிய கூந்தலையுடையவனும், அகன்ற கண்களையுடையவனும், ஜ்யோதியாக விளங்கும் பகவான் விஷம் கலந்த மாம்ஸம்போன்ற சிற்றின்பங்களில் ப்ரீதியையுடைய என் மனதில் பிரகாசிக்கிறார்.

मुकुलायमाननयनाम्बुजं विभो-
र्मुरलीनिनादमकरन्दनिर्भरम् ।
मुकुरायमाणमृदुगण्डमण्डलं
मुखपङ्कजं मनसि मे विजृम्भताम् ॥

முகுளாயமாநநயநாம்புஜம் விபோர்
முரளீநிநாதமகரந்தநிர்பரம்
முகுராயமாணம்ருதுகண்டமண்டலம்
முகபங்கஜம் மநஸி மே விஜ்ரும்பதாம்.

தாமரை போன்ற கண்களை உடையதும், வேணுகானத்தின் நாதமாகிற இனிய தேன் நிறைந்ததும், கண்ணாடிபோன்ற மிருதுவான கன்னங்களையுடையதுமான பகவானுடைய திருமுகமானது எனது மனதில் எப்பொழுதும் தோன்றட்டும்.

कमनीयकिशोरमुग्धमूर्तेः
कलवेणुक्वणिताद्दृताननेन्दोः ।
मम वाचि विजृम्भतां मुरारे-
र्मधुरिम्णः कणिकापि कापि कापि ॥

கமநீயகிசோரமுக்தமூர்த்தே:
கலவேணுக்வணிதாத்ருதாநநேந்தோ:
மம வாசி விஜ்ரும்பதாம் முராரேர்
மதுரிம்ண: கணிகாபி காபி காபி.

மிகவும் அழகிய பாலபருவத்துடன் விளங்குகின்ற இனிய வேணுகானத்தின் நாதமென்ற அமிருதம் நிறைந்த சந்திரன் போன்ற திருமுகத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய இனிய திருவிளையாடல்களையும், குணங்களையும் எடுத்துச்சொல்லக்கூடிய சிறுதுளி சக்தியாவது எனது வாக்கில் உண்டாகட்டும்.

मदशिखण्डिशिखण्डविभूषणं
मदनमन्थरमुग्धमुखाम्बुजम् ।
व्रजवधूनयनाञ्चलवाञ्छितं
विजयतां मम वाङ्मयजीवितम् ॥

மதசிகண்டிசிகண்டவிபூஷணம்
மதநமந்தரமுக்தமுகாம்புஜம்

வ்ரஜவதூநயநாஞ்சலவஞ்சிதம்
விஜயதாம் மம வாங்மயஜீவிதம்.

மதங்கொண்ட மயிலின் தோகையால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடையவனும், சிருங்காரம் நிறைந்த தாமரைபோன்ற திருமுகத்தையுடையவனும், கோபிகாஸ்திரீகளுடைய கடைக்கண் பார்வையால் வஞ்சிக்கப்பட்டவனும், எனது வாக்கிற்கு உயிரை அளிப்பவனுமான பகவான் ஸ்ரீ அதிக மேன்மையுடன் விளங்குகிறார்.

पल्लवारुणपाणिपङ्कजसंगिवेणुरवाकुलं
फुल्लपाटलपाटलीपरिवादिपादसरोरुहम् ।
उल्लसन्मधुराधरद्युतिमञ्जरीसरसाननं
वल्लवीकुचकुम्भकुङ्कुमपङ्किलं प्रभुमाश्रये ॥

பல்லவாருணபாணிபங்கஜஸங்கிவேணு
ரவாகுலம்
புல்லபாடலபாடலீபரிவாதிபாதஸரோருஹம்
உல்லஸந்மதுராதரத்யுதிமஞ்சரீஸரஸாநநம்
வல்லவீகுசகும்பகுங்குமபங்கிலம் ப்ரபுமாச்ரயே.

துளிர்போல் சிவந்த தாமரையை ஒத்த கைகளிலிருக்கும் வேணுவின் நாதத்திலீடுபட்டவனும், மலர்ந்த சிகப்பான பாதிரிபுஷ்பங்களைப்

பரிஹாஸம் செய்யத்தக்கதான திருவடித்தாமரைகளையுடையவனும், அழகாய் விளங்குகின்ற இனிய அதரங்களுடைய காந்தியாலே ஸரஸமான திருமுகத்தையுடையவனும், கோபிகாஸ்திரீகளின் ஸ்தனங்கள் மீதுள்ள குங்குமங்களால் அலங்கரிக்கப்பட்ட பிரபுவான பகவானை சரணமடைகின்றேன்.

अपाङ्गरेखाभिरभङ्गुराभि-
रनङ्गरेखारसरञ्जिताभिः ।
अनुक्षणं वल्लवसुन्दरीभि-
रभ्यर्च्यमानं विभुमाश्रयामः ॥

அபாங்கரேகாபிரபங்குராபி:
அநங்கரேகாரஸரஞ்சிதாபி:
அநுக்ஷணம் வல்லவஸுந்தரீபி:
அப்யர்ச்யமாநம் விபுமாச்ரயாம:

சிருங்காரம் ததும்பும் நீண்ட அழகிய கடைக்கண் பார்வையுடன் கூடிய கோபிகாஸ்திரீகளால் எப்பொழுதும் பூஜிக்கப்படுகின்ற பகவானை நாம் சரணமடைவோமாக.

हृदये मम हृद्यविभ्रमाणां
हृदयं हर्षविशाललोलनेत्रम् ।

तरुणं व्रजबालसुन्दरीणां
तरलं किंचन धाम संनिधत्ताम् ॥

ஹ்ருதயே மம ஹ்ருத்யவிப்ரமாணும்
ஹ்ருதயம் ஹர்ஷவிசால்லோலநேத்ரம்
தருணம் வ்ரஜபாலஸுந்தரீணும்
தரளம் கிஞ்சந தாம ஸந்நிதத்தாம்.

யௌவனபருவத்திலுள்ளவனும், ஸந்தோஷத்தால் பூரித்து அகன்ற கண்களையுடையவனும், அழகிய சிருங்காரசேஷ்டைகளையுடைய கோபிகா ஸ்திரீகளின் மனதில் எப்பொழுதும் வஸிப்பவனும், அழகிய ஜ்யோதியுமான பகவான் என் மனதில் எப்பொழுதும் இருப்பாராக.

निखिलभुवनलक्ष्मीनित्यलीलास्पदाभ्यां
कमलविपिनवीथीगर्वसर्वंकषाभ्याम् ।
प्रणमदभयदानप्रौढिगाढोद्धताभ्यां
किमपि वहतु चेतः कृष्णपादाम्बुजाभ्याम् ॥

நிகிலபுவநலக்ஷ்மீநித்யலீலாஸ்பதாப்யாம்
கமலவிபிநவீதீகர்வஸர்வங்கஷாப்யாம்
ப்ரணமதபயதாநப்ரௌடிகாடோத்ததாப்யாம்
கிமபி வஹது சேத: க்ருஷ்ணபாதாம்புஜாப்யாம்.

ஸகல உலகங்களிலுமுள்ள லக்ஷ்மியின் லீலா விபூதிகளுக்குக் காரணமானதும், தாமரை நிறைந்த குளத்தின் அழகை அபஹரிக்கக்கூடியதுமான, வணங்கியவர்களுக்கு அபயம் கொடுப்பதில் திறமை வாய்ந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய திருவடித்தாமரைகளை என் மனது சுமந்திருக்குமாக.

श्रीकृष्णकर्णामृते

द्वितीयाश्वासः

ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம்

இரண்டாவது ஆச்வாஸம்

अयि मुरलि मुकुन्दस्मेरवक्त्रारविन्द-
श्वसनमधुरसज्ञे त्वां प्रणम्याद्य याचे ।
अधरमणिसमीपं प्राप्तवत्यां भवत्यां
कथय रहसि कर्णे मद्दशां नन्दसूनोः ॥

அயி முரளி முகுந்தஸ்மேரவக்த்ராரவிந்த-
ச்வஸநமதுரஸஜ்ஞே த்வாம் ப்ரணம்யாத்ய யாசே
அதரமணிஸமீபம் ப்ராப்தவத்யாம் பவத்யாம்
கதய ரஹஸி கர்ணே மத்தசாம் நந்தஸூநோ:

ஓ முரளியே, ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகாரவிந்த த்தில் சேர்ந்து நின்று தேன்போன்ற அவனுடைய நிச்வாஸத்தின் ரஸத்தை நீ அறிவாய். தயை செய்து அவருடைய அதரங்களினருகில் இருக்கும் ஸமயம் அவருடைய காதில் ரஹஸ்யமாக என்னுடைய நிலைமையைச் சொல்லுவாயாக.

राधा पुनातु जगदच्युतदत्तचित्ता
मन्थानमाकलयती दधिरिक्तपात्रे ।
तस्याः स्तनस्तबकचञ्चललोलदृष्टि-
र्देवोऽपि दोहनधिया वृषभं निरुन्धन् ॥

ராதா புநாது ஜகதச்யுததத்தசித்தா
மந்தாநமாகலயதீ ததிரிக்தபாத்ரே
தஸ்யாஸ்ஸ்தநஸ்தபகசஞ்சலலோலத்ருஷ்டிர்
தேவோபி தோஹநதியா வ்ருஷபம் நிருந்தந்.॥

எந்த ராதிகை என்ற கோபிகை எப்பொழுதும் கிருஷ்ணனையே தியானித்துக்கொண்டு அவனிடத்திலேயே தன் மனதை செலுத்திவிட்டாளாகையால் உதயகாலத்தில் பானையில் தயிர் இருக்கு இல்லை என்பதை உணராமலே மத்தைவிட்டுக் கடையத் தொடங்கினளோ. ஸ்ரீ கிருஷ்ணனும் அந்த ராதிகையின் பூங்கொத்து போலிருக்கும் ஸ்தனங்களில் மனம் வைத்தவராய் பசு எருது என்ற வித்யாசமறியாதவ

ராய், பால் கறக்கத்தொடங்கினரோ, அவ்வித ராதிகையும் ஸ்ரீ கிருஷ்ணனும் என்னைக்காப்பாற்ற வேணும்.

कस्तूरीतिलकं ललाटफलके
वक्षःस्थले कौस्तुभं
नासाग्रे नवमौक्तिकं करतले
वेणुं करे कङ्कणम् ।
सर्वाङ्गे हरिचन्दनं च कलयन्
कण्ठे च मुक्तावलिं
गोपस्त्रीपरिवेष्टितो विजयते
गोपालचूडामणिः ॥

கஸ்தூரீதிலகம் லலாடபலகே
வக்ஷஸ்ஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே நவமௌக்திகம் கரதலே
வேணும் கரே கங்கணம்
ஸர்வாங்கே ஹரிசந்தநம் ச கலயந்
கண்டே ச முக்தாவளிம்
கோபஸத்ரீபரிவேஷ்டிதோ விஜயதே
கோபால சூடாமணி:

நெற்றியில் கஸ்தூரி திலகமும், திருமார்பில் கௌஸ்துபமணியும், மூக்கு நுனியில் முத்தும்,

கைத்தலத்தில் பிடித்த புல்லாங்குழலும், மணிக் கட்டுக்குக்கீழ் வளைகளும் அணிந்து, உடம்பெங்கும் சந்தனம் பூசியவராக கோபஸ்த்ரீகளுக்கிடை ஸ்ரீ கோபால சூடாமணி விளங்குகிறார்.

श्रीरामकर्णामृते

प्रथमाश्वासः

ஸ்ரீராமகர்ணம்ருதம்

முதல் ஆச்வாஸம்

श्रीराघवं दशरथात्मजमप्रमेयं
सीतापतिं रघुकुलान्वयरत्नदीपम् ।
आजानुबाहुमरविन्ददलायताक्षं
रामं निशाचरविनाशकरं नमामि ॥

ஸ்ரீராகவம் தசரதாத்மஜமப்ரமேயம்
ஸீதாபதிம் ரகுகுலாந்வயரத்நதீபம்
ஆஜாநுபாஹுமரவிந்ததளாயதாக்ஷம்
ராமம் நிசாசரவிநாசகரம் நமாமி.

ரகுவம்சத்திலுதித்தவரும், தசரதரின் புதல்வரும், அறிவிற்கு எட்டாதவரும், ஸீதாபதியும்

ரகுகுலமாகிற பாற்கடலுக்கு சந்திரன் போன்றவரும் முழங்கால் வரை நீண்ட கைகளையுடையவரும், இராக்ஷஸர்களை ஹதம் செய்கிறவருமான ஸ்ரீராமரை நமஸ்கரிக்கின்றேன்.

रामं लक्ष्मणपूर्वजं रघुवरं
सीतापतिं सुन्दरं
काकुत्स्थं करुणाकरं गुणनिधिं
विप्रप्रियं धार्मिकम् ।
राजत्कुण्डलमण्डिताननरुचिं
रात्रिंचरध्वंसिनं
शंपाकोटिसमानकान्तिविलस-
न्मायामृगघ्नं भजे ॥

ராமம் லக்ஷ்மணபூர்வஜம் ரகுவரம்
ஸீதாபதிம் ஸுந்தரம்
காகுத்ஸ்தம் கருணாகரம் குணநிதிம்
விப்ரப்ரியம் தார்மிகம்
ராஜத்குண்டலமண்டிதாநநருசிம்
ராத்ரிஞ்சரத்வம்ஸிநம்
சம்பாகோடிஸமாநகாந்திவிலஸந்
மாயாம்ருகக்நம் பஜே.

லக்ஷ்மணருக்குத்தமையனும், ரகுவம்ச ஸ்ரேஷ்

டரும், ஸீதாகாதரும், ஸௌந்தர்யமுடையவரும், ககுத்ஸ்தவம்சத்தில் உதித்தவரும், தயைக்கு இருப் பிடமும், கல்யாண குணங்களுக்கு நிதியாயும் ப்ராஹ் மணர்களுக்கு இஷ்டமானவரும், தார்மிகரும், பிர காசிக்கும் குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட முக காந்தியை உடையவரும், ராக்ஷஸ ஸம்ஹாரகரும், கோடி மின்னல்களுக்கு ஸமமான காந்தியுள்ள பொய்மானைக் கொன்றவருமான ஸ்ரீராமரை நமஸ் கரிக்கின்றேன்.

वामे भूमिसुता पुरश्च हनुमा-
न्पश्चात्सुमित्रासुतः
शत्रुघ्नो भरतश्च पार्श्वदलयो-
र्वाय्वादिकोणेषु च ।
सुग्रीवश्च विभीषणश्च युवराट्
तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं
रामं भजे श्यामलम् ॥

வாமே பூமிஸுதா புரச்ச ஹநுமாந்
பச்சாத் ஸுமித்ராஸுத:
சத்ருக்நோ பரதச்ச பார்ச்வதளயோ:
வாய்வாதிகோணேஷு ச

சுக்ரீவச்ச விபீஷணச்ச யுவராட்
தாராஸுதோ ஜாம்பவாந்
மத்யே நீலஸரோஜகோமளருசிம்
ராமம் பஜே ச்யாமளம்

இடதுபக்கத்தில் சீதையும், எதிரில் ஹநுமானும், பின்னால் லக்ஷ்மணரும், இரண்டு பக்கங்களிலும் பரதசத்ருக்னர்களும், வாய்வாதிமூலைகளில் சுக்ரீவன் விபீஷணன், அங்கதன், ஜாம்பவான் முதலியவர்களுமிருக்க, நடுவில் நீலோத்பலம்போல் அழகிய காந்தியையுடைய ஸ்ரீராமரை ஸேவிக்கிறேன்.

वैदेहीसहितं सुरद्रुमतले
हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये
वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभंजनसुते
तत्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं
रामं भजे श्यामलम् ॥

வைதேஹீஸஹிதம் ஸுரத்ருமதலே
ஹைமே மஹாமண்டபே
மத்யேபுஷ்பகமாஸநே மணிமயே
வீராஸநே ஸுஸ்திதம்

அக்ரே வாசயதி ப்ரபஞ்சநஸுதே
தத்வம் முநிப்ய: பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம்
ராமம் பஜே ச்யாமளம்

கல்பகவிருக்ஷத்தின் கீழ் பொன் மண்டபத்தில் புஷ்பகத்தின் நடுவில் மாணிக்கபீடத்தில் சீதையுடன் வீராஸனத்தில் அமர்ந்தவரும், எதிரில் ஆஞ்சநேயர் படிக்க முனிவர்களுக்கு தத்வத்தை போதித்துக் கொண்டிருக்கின்றவரும், பரதர் முதலியவர்களால் சூழப்பட்டவரும், கருத்த திருமேனியை உடையவருமான ராமரை ஸேவிக்கிறேன்.

शृङ्गारं क्षितिनन्दिनीविहरणे वीरं धनुर्भञ्जने
कारुण्यं बलिभोजनेऽद्भुतरसं सिन्धौ गिरिस्थापने ।
हास्यं शूर्पणखामुखे भयमघे बीभत्समन्यामुखे
रौद्रं रावणमर्दने मुनिजने शान्तं वपुः पातु नः ॥

ச்ருங்காரம் க்ஷிதிநந்திநீவிஹரணே
வீரம் தநுர்பஞ்ஜநே
காருண்யம் பலிபோஜநேऽத்புதரஸம்
ஸிந்தௌ கிரிஸ்தாபநே
ஹாஸ்யம் ஸூர்பணகாமுகே பயமகே
பீபத்ஸமந்யாமுகே
ரௌத்ரம் ராவணமர்தநே முநிஜநே
சாந்தம் வபு: பாது ந:

சீதையுடன் விஹாரம்செய்யும்போது சிருங்கார ரஸமும், சிவதனுஸை வளைக்கும்போது வீரரஸமும் காகாஸுரனிடத்தில் தயையும், ஸமுத்திரத்தில் பர்வதங்களை நிலைநிறுத்தும்போது ஆச்சர்யரஸமும் சூர்பணகையின் முகத்தில் ஹாஸ்யரஸமும், பாபத்தில் பயரஸமும் பரஸ்திரீகளின் முகத்தில் பீபத்ஸ ரஸமும் ராவண ஸம்ஹாரத்தில் ரௌத்ரரஸமும், முனீச்வரர்களிடத்தில் சாந்திரஸமும் தோன்றும் ஸ்வரூபம் எங்களை ரக்ஷிக்கட்டும்.

आपदामपहर्तारं दातारं सर्वसंपदाम् ।
लोकाभिरामं श्रीरामं भूयो भूयो नमाम्यहम् ॥
रामाय रामभद्राय रामचन्द्राय वेधसे ।
रघुनाथाय नाथाय सीतायाःपतये नमः ॥

ஆபதாமபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ
ஸம்பதாம்
லோகாபிராமம் ஶ்ரீராமம் பூயோ பூயோ
நமாம்யஹம்
ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய ஸீதாயா:பதயே நம:

ஆபத்துக்களை நீக்குபவரும், ஸகலஸம்பத்துக்களையும் கொடுப்பவரும், உலகினர் எல்லோருக்கும் பிரியமானவருமான ஸ்ரீராமரை மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கின்றேன்.

ராமருக்கு, ராமபத்ரருக்கு, ராமசந்திரருக்கு, உலகை தரித்து போஷிப்பவற்கு, ரகுநாதருக்கு, நாதருக்கு, சீதாதேவியின் பதிக்கு நமஸ்காரம்.

स्तोत्ररत्नम् ।

ஸ்தோத்ரரத்நம்

नमो नमो वाङ्मनसातिभूमये
नमो नमो वाङ्मनसैकभूमये ।
नमो नमोऽनन्तमहाविभूतये
नमो नमोऽनन्तदयैकसिन्धवे ॥

நமோ நமோ வாங்மநஸாதிபூமயே
நமோ நமோ வாங்மநஸைகபூமயே
நமோ நமோऽநந்தமஹாவிபூதயே
நமோ நமோऽநந்ததயைகஸிந்தவே

வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவராகிய உமக்கு நமஸ்காரம். வாக்கு மனது இவைகளுக்கு முக்ய விஷயமாகிய உமக்கு நமஸ்காரம். அளவில்லாத உயர்ந்த ஐசுவர்யத்தைஉடைய உமக்கு நமஸ்காரம் அளவில்லாத தயை நிறைந்த ஸமுத்ரமாகிய உமக்கு நமஸ்காரம்.

न धर्मनिष्ठोऽस्मि न चात्मवेदी
न भक्तिमांस्त्वच्चरणारविन्दे ।
अकिंचनोऽनन्यगतिः शरण्य
त्वत्पादमूलं शरणं प्रपद्ये ॥

ந தர்மநிஷ்டோऽஸ்மி ந சாத்மவேதீ
ந பக்திமாம்ஸ்த்வச்சரணுரவிந்தே
அகிஞ்சநோநந்யகதிச்சரண்ய
த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே.

யாகாதி தர்மகாரியங்களையும் நான் அனுஷ்டித்தவனில்லை. நான் ஆத்மஞானமுடையவனும் அல்ல. தேவரீருடைய திருவடித்தாமரைகளில் நான் பக்தியுடையவனும் இல்லை. ஒருவித உபாயமும் இல்லாதவன். உம்மைத்தவிர எனக்கு வேறு ஒருவரும் கதி இல்லை. சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுபவனே! உமது திருவடிகளை சரணம் அடைகிறேன்.

न निन्दितं कर्म तदस्ति लोके
सहस्रशो यन्न मया व्यधायि ।
सोऽहं विपाकावसरे मुकुन्द
क्रन्दामि संप्रत्यगतिस्तवाग्रे ॥

ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே
ஸஹஸ்ரசோ யந்ந மயா வ்யதாயி

ஸோऽஹம் விபாகாவஸரே முகுந்த
க்ரந்தாமி ஸம்ப்ரத்யகதிஸ்தவாக்ரே.

அநேகம் தடவைகள் என்னால் செய்யப்படாத சாஸ்திரங்களில் விலக்கப்பட்ட காரியங்கள் இவ்வுல கில் இல்லை. பகவானே! அப்படிப்பட்ட நான் அவை கள் பயன்தரும் காலத்தில் உம்முடைய எதிரில் இப் பொழுது வேறு கதி இல்லாதவனாக உம்மை கதறி அழைக்கின்றேன்.

अपराधसहस्रभाजनं
पतितं भीमभवार्णवोदरे ।
अगतिं शरणागतं हरे
कृपया केवलमात्मसात्कुरु ॥

அபராதஸஹஸ்ரபாஜநம்
பதிதம் பீமபவார்ணவோதரே
அகதிம் சரணாகதம் ஹரே
க்ருபயா கேவலமாத்மஸாத்குரு.

நான் அனேகவித அபராதங்கள் செய்திருப் பினும், பயங்கரமான இவ்வுலகவாழ்க்கை என்னும் கடலின் நடுவில் வீழ்ந்து தவிக்கின்ற, கதியற்று உம்மை சரணமடைந்த என்னை பகவானே! க்ருபை கூர்ந்து அடிமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

॥ नदीस्तोत्रम् ॥

நதீஸ்தோத்ரம்.

(ஸ்னானம் செய்யுங்காலத்தில் அடியிற்காணும் சுலோகங்களை ஒருதடவை ஜபம் செய்து புண்ய நதிகளை ஸ்மரித்துக்கொண்டு, த்ரிவிக்ரமாவதாரத்தில் ஸத்யலோகத்தில் ப்ரஹ்மாவின் ஸ்வர்ண கமண்டலு தீர்த்தத்தால் பகவானுடைய திருவடிகளில் திருமஞ்சனம் செய்து திருவாராதனம் பண்ணின தீர்த்தம் கங்கையாக ப்ரவஹித்து நம் சிரஸ்ஸில் விழுவதாக தியானம் செய்துகொண்டு श्रीहरिः (ஸ்ரீஹரி:) என்று மூன்றுதடவை சொல்லிக்கொண்டு ஸ்னானம் செய்யவேண்டும்)

नदीस्तोत्रं प्रवक्ष्यामि सर्वपापप्रणाशनम् ।
भागीरथी वारणसी यमुना च सरस्वती ॥

फल्गुनी शोणभद्रा च नर्मदा गण्डकी तथा ।
गयाप्रयागे सरयूस्त्रिवेणी मणिकर्णिका ॥

कृष्णवेणी भीमरथी गौतमी भयनाशिनी ।
अघनाशी वियद्गङ्गा तुङ्गभद्रा मलापहा ॥

कुण्डी हैमवती चैव वरदा च कुमुद्वती ।
वेत्रावती वेदवती गायत्री कौशिकी तथा ॥

कुन्दा मन्दाकिनी चैव कृतमाला हरिद्रुता ।
मञ्जरी तपती काली सीता चालकनन्दिनी ॥

सिद्धाश्रमश्च सिह्माद्री पुण्डरीकमथोत्पलम् ।
स्वामिपुष्करिणी चैव सत्यपुष्करिणी तथा ॥

चन्द्रपुष्करिणी चैव हेमपुष्करिणी तथा ।
कौमोदकी कुरुक्षेत्रं बदरी द्वारका तथा ॥

सालग्रामं च तोताद्री नरनारायणाश्रमः ।
बृन्दावनं च केदारं हरिद्वारं च गोकुलम् ॥

श्रीकाकुलं च श्रीकूर्मं पाण्डुरङ्गं कपिस्थलम् ।
अहोबिलं जगन्नाथं वेङ्कटाद्री च नैमिशम् ॥

अयोध्या सेतुमधुरे श्रीमुष्णं रङ्गमन्दिरम् ।
अवन्ती तु तथा माया श्रीशैलं कुंभघोणकम् ।
पुष्करं च तथा काञ्ची ह्यनन्तं च जनार्दनम् ॥

நதீஸ்தோத்ரம் ப்ரவக்ஷ்யாமி ஸர்வபாப
ப்ரணுசநம்

பாகீரதீ வாரணஸீ யமுநா ச ஸரஸ்வதீ

பல்குநீ சோணபத்ரா ச நர்மதா கண்டகீ ததா

கயாப்ரயாகே ஸரயூஸ் த்ரிவேணீ மணிகர்ணிகா

க்ருஷ்ணவேணீ பீமரதீ கௌதமீ பயநாசிநீ

அகநாசி வியத்கங்கா துங்கபத்ரா மலாபஹா

குண்டீ ஹைமவதீ சைவ வரதா ச குழத்வதீ
வேத்ராவதீ வேதவதீ காயத்ரீ கௌசிகீ ததா

குந்தா மந்தாகிநீ சைவ க்ருதமாலா ஹரித்ருதா
மஞ்சரீ தபதீ காளீ ஸீதா சாலகநந்திநீ

ஸித்தாச்ரமச்ச ஸிஹ்மாத்ரீ புண்டரீக
மதோத்பலம்
ஸ்வாமிபுஷ்கரிணீ சைவ ஸத்யபுஷ்கரிணீ ததா

சந்த்ரபுஷ்கரிணீ சைவ ஹேமபுஷ்கரிணீ ததா
கௌமோதகீ குருக்ஷேத்ரம் பதரீ துவாரகா ததா

ஸாலக்ராமம் ச தோதாத்ரீ நரநாராயணாச்ரம:
ப்ருந்தாவநம் ச கேதாரம் ஹரித்வாரம் ச
கோகுலம்

ஸ்ரீகாகுலம் ச ஸ்ரீகூர்மம் பாண்டுரேங்கம்
கபிஸ்தலம்
அஹோபிலம் ஜகந்நாதம் வேங்கடாத்ரீ ச
நைமிசம்

அயோத்யா ஸேதுமதுரே ஸ்ரீமுஷ்ணம்
ரங்கமந்திரம்
அவந்தீ து ததா மாயா ஸ்ரீசைலம் கும்ப
கோணகம்
புஷ்கரம் ச ததா காஞ்சீ ஹ்யநந்தம் ச ஜநார்தநம்.

श्रीशेषाचले श्रीशुकमुनेः प्रार्थना

சேஷாசலத்தில் சுகமுனிவரின் பிரார்த்தனை

त्वक्चर्ममांसास्थ्यसृगश्रुमूत्र-
श्लेष्मान्त्रविट्शुक्रसमुच्चयेषु ।
देहेष्वसारेषु न मे स्पृहा च
ध्रुवं ध्रुवं त्वं भगवन्प्रसीद ॥

த்வக்சர்மமாம்ஸாஸ்த்யஸ்ருகச்ருமூத்ர-
ச்லேஷ்மாந்த்ரவிட்சுக்ரஸமுச்சயேஷு
தேஹேஷ்வஸாரேஷு ந மே ஸ்ப்ருஹா ச
த்ருவம் த்ருவம் த்வம் பகவந் ப்ரஸீத.

த்வக்கு, சருமம், மாமிசம், எலும்பு, ரத்தம், கண்ணீர், மூத்திரம், சிலேஷ்மா, குடல் முதலியவைகள் நிறைந்த ஸாரமற்ற இந்த சரீரத்தில் நிச்சயமாக எனக்கு ஆசை கிடையாது. பகவானே! நீர் அருள் புரிவீராக.

कारुण्यपाथोनिधिवल्गदूर्मि-
मालालसच्छैवलकज्जलाक्तैः ।
राजीवराशीरमणैरपाङ्गै-
रनाथमानन्दय नाकनाथ ॥

காருண்யபாதோநிதிவல்கதூர்மி-
மாலாலிஸச்சைவலகஜ்ஜலாக்தை:
ராஜீவராசீரமணீரபாங்கை-
ரநாதமாநந்தய நாகநாத.

ஸ்வர்கத்திற்கு நாதனே! கருணைக்கடலில் எழும்பும் அலைகளுக்கு ஒப்பானதும், கடற்பாசி போன்ற மையால் திட்டப்பட்டதும், தாமரைக்கு ஸமமுமான கடைக்கண்ணால் அநாதையான என்னை ஆனந்திக்கச்செய்வீராக.

भक्तिः क्व मे त्वच्चरणारविन्दे
मधूदमद्यादिषु मे ह्यनन्या ।
बुद्धिः क्व दुष्टेन्द्रियवाजिकृष्टा
नैकत्र तेजस्तिमिरस्थितिर्हि ॥

பக்தி: க்வ மே த்வச்சரணாரவிந்தே
மதூதமத்யாதிஷு மே ஹ்யநந்யா
புத்தி: க்வ துஷ்டேந்த்ரியவாஜிக்ருஷ்டா
நைகத்ர தேஜஸ்திமிரஸ்திதிர்ஹி.

உமது திருவடித்தாமரைகளில் எனக்கு பக்தி எப்படி உண்டாகும்? நிகரில்லாத பக்தி மத்யாதிகளில் தானிருக்கின்றது. துஷ்ட இந்திரியங்களால் இழுத்துச் செல்லப்படும் என் புத்தி எப்படிப் போகுமோ? ஒளியும் இருளும் ஓரிடத்திலிருக்காதன்றோ?

न विद्यते त्वत्पदपद्मपीठ-
निषेविणां क्वाप्यशुभं नराणाम् ।
उपस्थितं मे भयमुत्पलाक्षि-
विलोकनैर्लोकय लोकनाथ ॥

ந வித்யதே த்வத்பதபத்மபீட-
நிஷேவிணும் க்வாப்யசுபம் நராணும்
உபஸ்திதம் மே பயமுத்பலாக்ஷி-
விலோகநைர்லோகய லோகநாத.

உமது பாதங்களை ஸேவிக்கும் மனிதர்களுக்கு அசுபம் என்பதே கிடையாது. உலகிற்கெல்லாம் நாதனே ! எனக்கு உண்டாகியிருக்கும் பயத்தை நீலோத்பலம்போன்ற உமது கண்களின் கடைக்கண்ணுல் கடாக்ஷித்து நீக்குவீராக.

समाधिभङ्गोऽयमिह प्रवृत्तः
दुरात्मना केनचिदुद्धतेन ।
त्वमेव मां रक्ष भयादमुष्मा-
त्त्वदन्यतो नास्ति गतिर्मुकुन्द ॥

ஸமாதிபங்கோऽயமிஹ ப்ரவ்ருத்த:
துராத்மநா கேநசிதுத்ததேந
த்வமேவ மாம் ரக்ஷ பயாதமுஷ்மாத்
த்வதந்யதோ நாஸ்தி கதிர்முகுந்த.

முகுந்தனே ! எனது மனதின் ஸமாதியானது இப்பொழுது யாராலோ கெடுக்கப்படுகின்றது. இவ்வித பயத்திலிருந்து நீரே என்னை ரக்ஷிக்கவேண்டும். உம்மைத்தவிர எனக்கு வேறு ஒருவரும் கதியில்லை.

अनाथनाथ धिषणा मम त्वय्येव वर्तते ।
सर्वदा सर्वकालेषु तदास्तां त्वत्प्रसादतः ॥

அநாதநாத திஷணா மம த்வய்யேவ வர்ததே
ஸர்வதா ஸர்வகாலேஷு ததாஸ்தாம்
த்வத்ப்ரஸாதத:

அநாதர்களுக்கு நாதனே! எனது புத்தியானது உம்மிடத்திலேயே செல்லுகிறது. அப்படியே எப்பொழுதும் எக்காலத்தும் உமது க்ருபையால் இருக்கும்படி அருள் புரிவீராக.

प्रसन्ने त्वयि गोविन्दालभ्यं सर्वत्र किं प्रभो ।
स्वर्गापवर्गौ भगवन् त्वद्भक्तानामदुर्लभौ ॥

ப்ரஸந்நே த்வயி கோவிந்தா-
லப்யம் ஸர்வத்ர கிம் ப்ரபோ
ஸ்வர்காபவர்கௌ பகவந்
த்வத்பக்தாநாமதுர்லபௌ.

பகவானே ! ப்ரபுவே ! கோவிந்தா ! தேவரீர் ப்ரஸன்னமாக இருக்க எங்கும் கிடைக்கக்கூடாதது

என்ன விருக்கிறது? ஸ்வர்கமும் மோக்ஷமும் உன் பக்தர்களுக்கு துர்லபமில்லை.

भवता वीक्ष्यते यस्तु तस्य त्वद्भक्तिरूर्जिता ।
उपेक्ष्यते तु यस्तस्य भोगेच्छैव हि जायते ॥

பவதா வீக்ஷ்யதே யஸ்து தஸ்ய த்வத்பக்தி-
நர்ஜிதா
உபேக்ஷ்யதே து யஸ்தஸ்ய போகேச்சைவ ஹி
ஜாயதே.

உம்மால் கடாக்ஷிக்கப்பட்டவனுக்கு பக்தி எப்பொழுதும் நிலையாக உள்ளது. எவனொருவன் அலக்ஷ்யம் செய்யப்படுகின்றானோ, அவனுக்கு சிற்றின்பங்களிலேதான் ஆசையுண்டாகிறதன்றோ.

अतः शृङ्गारयोग्यस्त्रीभयविह्वलमत्र माम् ।
रक्ष त्वमेव मम हि शरण्यः शरणागतम् ॥

அத: ச்ருங்காரயோக்யஸ்த்ரீபயவிஹ்வலமத்ர
மாம்
ரக்ஷ த்வமேவ மம ஹி சரண்ய: சரணாகதம்.

ஆகவே சிற்றின்பங்களில் பயத்தால் பீடிக்கப்பட்டு சரணமடைந்த என்னை காப்பாற்றக்கூடியவரான தேவரீரே ரக்ஷிக்கவேண்டும்.

नमः सकलकल्याणकारिणे करुणात्मने ।
श्रीवत्सवक्षसे तस्मै लक्ष्मीनारायणात्मने ॥

நம: ஸகலகல்யாணகாரிணே கருணாத்மநே
ஸ்ரீவத்ஸவக்ஷஸே தஸ்மை லக்ஷ்மீ
நாராயணாத்மநே.

ஸகலவிதமான நன்மைகளையும் அளிக்கவல்ல கருணாமூர்த்தியான ஸ்ரீவத்ஸத்தால் அலங்கரிக்கப்பட்ட மார்பையுடைய லக்ஷ்மீநாராயணனாகிய உம் பொருட்டு நமஸ்காரம்.

श्रीमद्भागवतसंग्रहः

ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்.

आदौ देवकिदेविगर्भजननं गोपीगृहे वर्धनं
मायापूतनजीवितापहरणं गोवर्धनोद्धारणम् ॥
कंसच्छेदनकौरवादिहननं कुन्तीसुतापालनं
ह्येतद्भागवतं पुराणकथितं श्रीकृष्णलीलामृतम् ॥

ஆதௌ தேவகிதேவிகர்பஜநநம்
கோபீக்ருஹே வர்தநம்
மாயாபூதநஜீவிதாபஹரணம்
கோவர்தநோத்தாரணம்
கம்ஸச்சேதநகௌரவாதிஹநநம்
குந்தீஸுதாபாலநம்
ஹ்யேதத்பாகவதம் புராணகதிதம்
ஸ்ரீக்ருஷ்ணலீலாம்ருதம்.

முதலில் தேவகிதேவியினிடத்து அவதரித்ததும், கோப ஸ்திரீயான யசோதையின் வீட்டில் வளர்ந்து வந்ததும், மாயாரூபிணியான பூதனையை ஸம்ஹரித்ததும், கோவர்த்தன மலையைத்தூக்கி சுமந்ததும், கம்ஸனையும் கௌரவர் முதலானவர்களையும் கொன்றதும், குந்தியின் பிள்ளைகளான பஞ்சபாண்டவர்களைக் காப்பாற்றியதும், இவையே பாகவதம் என்பதாகும். இவையே புராணத்தில் சொல்லப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனின் லீலாம்ருதமாகும்.

श्रीमद्भागवतम्

ஸ்ரீமத்பாகவதம்

चतुर्थस्कन्धः नवमोऽध्यायः

ध्रुवस्तुतिः

துருவஸ்துதி

4வது ஸ்கந்தம் 9வது அத்யாயம்

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
संजीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान् नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

யோऽந்த: ப்ரவிச்ய மம வாசமிமாம்
ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலசக்திதர: ஸ்வதாம்நா
அந்யாம்ச்ச ஹஸ்தசரணச்ரவணத்வகாதீந்
ப்ராணூந் நமோ பகவதே புருஷாய துப்யம்.

ஸர்வவல்லமைபொருந்திய எந்த பகவான் தன் தன் காரியத்தைச் செய்ய சக்தியற்றவைகளான எனது வாக்கு என்னும் இந்திரியம், மற்றுமுள்ள கை, கால் காது ஸ்பர்சேந்திரியம் முதலிய எல்லா இந்திரியங்களையும், தனது ஸங்கல்பத்தால் உள் புகுந்து தனது தனது காரியத்தைச்செய்ய சக்தியுள்ளவைகளாகச் செய்கின்றானே, அத்தகைய மஹாபுருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

एकस्त्वमेव भगवन्निदमात्मशक्त्या
मायाख्ययोरुगुणया महदाद्यशेषम् ।
सृष्ट्वानुविश्य पुरुषस्तदसद्गुणेषु
नानेव दारुषु विभावसुवद्विभासि ॥

ஏகஸ்த்வமேவ பகவந்நிதமாத்மசக்த்யா
மாயாக்யயோருகுணயா மஹதாத்யசேஷம்
ஸ்ருஷ்ட்வானுவிச்ய புருஷஸ்ததஸத்குணேஷு
நாநேவ தாருஷு விபாவஸுவத்விபாஸி.

பகவானே! மாயை எனச் சொல்லப்படுவதான

பல குணங்களை உடைய உமது சக்தியால், மஹத் என்னும் தத்துவத்தை ஆதியாகக்கொண்டுள்ள இந்த எல்லாவற்றையும் படைத்து அதனுள் புகுந்து அந்தர்யாமியான நீர் ஒருவரே அந்த மாயையின் காரியங்களும், உண்மையில் அஸத்துக்களுமான இந்திரியங்களில் இருந்துகொண்டு கட்டையில் நெருப்புபோல் அவ்வந்த தேவதாரூபமாக பலதரப் பட்டவர் போலக்காணப்படுகின்றீர். ஆகவே ஞான க்ரியாசக்தியை உடையவர் நீர் ஒருவரேதான்.

त्वद्दत्तया वयुनयेदमचष्ट विश्वं
सुप्तप्रबुद्ध इव नाथ भवत्प्रपन्नः ।
तस्यापवर्ग्यशरणं तव पादमूलं
विस्मर्यते कृतविदा कथमार्तबन्धो ॥

த்வத்தத்தயா வயுநயேதமசஷ்ட விச்வம்
ஸுப்தப்ரபுத்த இவ நாத பவத்ப்ரபந்ந:
தஸ்யாபவர்க்யசரணம் தவ பாதமூலம்
விஸ்மர்யதே க்ருதவிதா கதமார்த்தபந்தோ.

பிருஹ்மதேவனும், உம்மிடமிருந்தே பெற்ற ஞானக்கிரியாசக்தியை உடையவராகிறார். எளியவர்களைக்காக்க வல்லவனாகிய நாதனே! உம்மை அடைக்கலம்புகுந்த பிருஹ்மதேவன் உம்மால் அளிக்கப்பட்ட ஞானத்தால் தூங்கி விழித்துக்கொண்டவன்

போல இவ்வுலகத்தைக் கண்டார். எனவே மோக்ஷத்தை அடைகின்றவர்களுக்கும் அடைக்கலமாக இருக்கின்ற உமது திருவடிகளை நன்றியறிவுள்ள ஒருவன் எவன்தான் மறக்கக்கூடும்?

नूनं विमुष्टमतयस्तव मायया ते
ये त्वां भवाप्ययविमोक्षणमन्यहेतोः ।
अर्चन्ति कल्पकतरुं कुणपोपभोग्य-
मिच्छन्ति यत्स्पर्शजं निरयेऽपि नॄणाम् ॥

நூநம் விமுஷ்டமதயஸ்தவ மாயயா தே
யே த்வாம் பவாப்யயவிமோக்ஷண-
மந்யஹேதோ:
அர்ச்சந்தி கல்பகதரும் குணபோபபோக்ய-
மிச்சந்தி யத்ஸ்பர்சஜம் நிரயேபி ந்ருணாம்.

எவர்கள் பிறப்பு இறப்பு இவைகளைப்போக்குவதற்குக் காரணமான உம்மை சிற்றின்பம் முதலியவற்றை வேண்டி பூஜிக்கிறார்களோ, அவர்கள் உமது மாயையினால் ஏமாற்றமடைந்த புத்தியைஉடையவர்களாகிறார்கள். ஏனெனில் இஷ்டத்தை எல்லாம் தரக்கூடிய கல்பகவிருக்ஷமான உம்மை பூஜித்து அதன் பயனாக பிணத்துக்கொப்பான சரீரத்தால் அனுபவிக்கத்தகுந்த இன்பத்தையே விரும்புகிறார்கள். அதனால் ஆவதென்ன பயன்? விஷயேந்திரியங்

களுடைய சம்பந்தத்தால் உண்டாகும் இன்பமான அ நரகத்திலும் உண்டாகக்கூடியதாகும் அன்றோ.

या निर्वृतिस्तनुभृतां तव पादपद्म-
ध्यानाद्भवज्जनकथाश्रवणेन वा स्यात् ।
सा ब्रह्मणि स्वमहिमन्यपि नाथ मा भूत्
किं न्वन्तकासिलुलितात्पततां विमानात् ॥

யா நிர்வ்ருதிஸ்தநுப்ருதாம் தவ பாதபத்ம
த்யாநாத் பவஜ்ஜநகதாச்ரவணேந வா ஸ்யாத்
ஸா ப்ரஹ்மணி ஸ்வமஹிமந்யபி நாத மா பூத்
கிம்ந்வந்தகாஸிலுளிதாத் பததாம் விமாநாத்.

ஏ நாதனே ஜீவன்களுக்கு உமது திருவடிகளை தியானம் செய்வதினுலோ, உம்முடைய பக்தர்களால் சொல்லப்படும் உமது கதைகளைக்கேட்பதினுலோ, எவ்வித இன்பம் ஏற்படுகின்றதோ, அவ்வித இனப, மானது நிஜானந்தரூபமான பரப்ருஹ்மத்தினிடத் திலும் உண்டாகமாட்டாது. யமனுடைய கூர்மை யான கத்திபோன்ற காலத்தால் வெட்டப்பட்டு விமானத்திலிருந்து கீழே விழுகின்றவர்களுக்கு அந்த சுகம் உண்டாகாது. இதைச்சொல்லவும் வேண்டுமோ ?

भक्तिं मुहुः प्रवहतां त्वयि मे प्रसङ्गो
भूयादनन्त महताममलाशयानाम् ।

येनाञ्जसोल्बणमुरुव्यसनं भवाब्धिं
नेष्ये भवद्गुणकथामृतपानमत्तः ॥

பக்திம் முஹு: ப்ரவஹதாம் த்வயி
மே ப்ரஸங்கோ
பூயாதநந்த மஹதாமமலாசயாநாம்
யேநாஞ்ஜஸோல்பணமுருவ்யஸநம்
பவாப்திம்
நேஷ்யே பவத்குணகதாம்ருதபாநமத்த:

ஏ அனந்தனே! இடைவிடாது எப்பொழுதும் உம்மிடம் பக்தியுள்ளவர்களும், சுத்தமான மனதை உடையவர்களுமான பெரியோர்களுடைய மேலான சேர்க்கையானது எனக்கு உண்டாக வேண்டும். அவ்விதமான மஹான்களுடைய சேர்க்கையினாலே உமது குணாதிசயங்களை விளக்கும் கதைகளைக் கேட்பது என்ற அமுத பானத்தாலே மதங்கொண்டவனாகி வேறு ஒன்றையும் அறியாமல் இருந்துகொண்டு, மிகுந்த பயத்தை உண்டுபண்ணுவதும், அதிக துன்பங்கள் நிறைந்ததுமான பிறவிக்கடலை நான் எளிதில் கடந்துசென்று விடுவேன்.

ते न स्मरन्त्यतितरां प्रियमीश मर्त्यं
ये चान्वदः सुतसुहृद्गृहवित्तदाराः ।

ये त्वब्जनाभ भवदीयपदारविन्द-
सौगन्ध्यलुब्धहृदयेषु कृतप्रसङ्गाः ॥

தே ந ஸ்மரந்த்யதிதராம் ப்ரியமீச மர்த்யம்
யே சாந்வத: ஸுதஸுஹ்ருத்க்ருஹவித்த-
தாரா:
யே த்வப்ஜநாப பவதீயபதாரவிந்த-
ஸௌகந்த்யலுப்தஹ்ருதயேஷு க்ருத
ப்ரஸங்கா:

ஏ பத்மநாப! ஈசனே! உமது தாமரை போன்ற திருவடிகளிலுள்ள நறு மணத்தில் ஆவல் கொண்ட மனமுடையவர்களான மஹான்களிடத்தில் சேர்க்கையுடையவர்களாக எவர்கள் இருக்கின்றார்களோ, அவர்கள் விரும்பப்படுவதாயினும், அழிந்து போகும் இயல்பையுடைய இவ்வுடலையும், அதைச் சார்ந்துள்ள புதல்வன், நண்பன், வீடு, பணம், மனையாள் ஆகியோர்களையும் நினையார்கள். (தேகாபிமானம் ஏற்படுவதில்லை என்பது கருத்து)

तिर्यङ्नगद्विजसरीसृपदेवदैत्य-
मर्त्यादिभिः परिचितं सदसद्विशेषम् ।
रूपं स्थविष्ठमज ते महदाद्यनेकं
नातः परं परम वेद्मि न यत्र वादः ॥

திர்யங்நகத்விஜஸரீஸ்ருபதேவதைத்ய-
மர்த்யாதிபி: பரிசிதம் ஸதஸத்விசேஷம்
ருபம் ஸ்தவிஷ்டமஜ தே மஹதாத்யநேகம்
நாத: பரம் பரம வேத்மி ந யத்ர வாத:

ஏ பரமனே! பிறப்பில்லாதவனே! மிருகம், மரம், பறவை, பாம்பு, தேவர், அரக்கர், மனிதன் முதலியவர்களால் நிறைந்ததும் ஸதஸத்விசேஷங்களை உடையதும், மஹத் முதலிய அநேக காரணங்களையுடையதுமான உம்முடைய இந்த ஸ்தூலமான விராட்ரூபத்தைமட்டும் அறிவேனே யல்லாது இவ்வாறான ரூபத்துக்கு மேற்பட்ட சப்த வியவஹார மற்றதாயுள்ள பரப்ரமஹரூபத்தை நான் அறியேன். ஆகவே அபிமானம் நீங்கவில்லை.

कल्पान्त एतदखिलं जठरेण गृह्णन्
शेते पुमान् स्वदृगनन्तसखस्तदङ्के ।
यन्नाभिसिन्धुरुहकाञ्चनलोकपद्म-
गर्भे द्युमान्भगवते प्रणतोऽस्मि तस्मै ॥

கல்பாந்த ஏததகிலம் ஜடரேண க்ருஹ்ணந்
சேதே புமாந் ஸ்வத்ருகநந்தஸகஸ்ததங்கே
யந்நாபிஸிந்துருஹகாஞ்சநலோகபத்ம-
கர்பே த்யுமாந் பகவதே ப்ரணதோஸ்மி தஸ்மை.

யோகநித்திரையில் இருப்பவரும், ஆனந்த பற்றியே தனது ரூபத்தில் வைத்த த்ருஷ்டியை யுடையவரும், ஆதிசேஷனைத் துணையாகக்கொண்ட வரும் புருஷன் என்று சொல்லப்படுகின்றவரும், ப்ரளயகாலத்தின் முடிவில் இம்மூன்று உலகம் யாவற்றையும் தமது வயிற்றினுள் வைத்துக்கொண்டு ஆதிசேஷன் மீது பள்ளிகொண்டிருப்பவரும், தன் நாபிகமலத்தில் காந்தியுள்ள பிருஹ்மதேவனைப் படைத்தவருமான அந்த பகவானின் பொருட்டு வணங்குகிறேன்.

त्वं नित्यमुक्तपरिशुद्धविबुद्ध आत्मा
कूटस्थ आदिपुरुषो भगवांस्त्र्यधीशः ।
यद्बुद्ध्यवस्थितिमखण्डितया स्वदृष्ट्या
द्रष्टा स्थितावधिमखो व्यतिरिक्त आस्से ॥

த்வம் நித்யமுக்தபரிசுத்தவிபுத்த ஆத்மா
கூடஸ்த ஆதிபுருஷோ பகவாந் த்ர்யதீச:
யத்புத்யவஸ்திதிமகண்டிதயா ஸ்வ
த்ருஷ்ட்யா
த்ரஷ்டா ஸ்திதாவதிமகோ வ்யதிரிக்த
ஆஸ்ஸே.

நீர் புத்தியின் முடிவற்ற அதாவது அனந்த மான நிலையைப் பரிபூர்ணமான சித்சக்தியால் பார்க்

ன்றீர். ஆனதுபற்றி நித்ய முக்தராக ஜீவனைக் காட்டிலும் விலக்ஷணனாக இருக்கிறீர். ஜீவனோவெனில் உமது அருளால் முக்தியை அடைகிறான். நீர் பரிசுத்தமானவர். ஆனால் ஜீவன் மலமுள்ளவனுமிருக்கிறான். நீர் ஞானஸ்வரூபர். ஜீவன் அஞ்ஞானமுடையவன். நீர் ஆத்மா. ஜீவன் ஜடன். நீர் விகாரமற்றவர். ஜீவன் விகாரத்தை அடைபவனாகிறான். நீர் ஆதிபுருஷர். ஜீவன் ஜனிக்கக்கூடிய சுபாவமுடையவன். நீர் ஐசுவரியம் நிறைந்துள்ளவர். ஜீவன் ஐச்வர்யம் அற்றவன். நீர் மூன்று குணங்களுக்கும் நியந்தா. ஜீவனோவெனில் அவைகளுக்கு அடிமையானவன். ஆனது பற்றி அதே நிலையிலுள்ள நீர் ரக்ஷிக்கும் விஷயத்தில் யாகபுருஷனாகிய விஷ்ணுவாக இருக்கிறீர்.

यस्मिन्विरुद्धगतयो ह्यनिशं पतन्ति
विद्यादयो विविधशक्तय आनुपूर्व्यात् ।
तद्ब्रह्म विश्वभवमेकमनन्तमाद्य-
मानन्दमात्रमविकारमहं प्रपद्ये ॥

யஸ்மிந் விருத்தகதயோ ஹ்யநிசம் பதந்தி
வித்யாதயோ விவிதசக்தய ஆநுபூர்வ்யாத்
தத்ப்ரஹ்ம விச்வபவமேகமநந்தமாத்ய-
மாநந்தமாத்ரமவிகாரமஹம் ப்ரபத்யே.

எப்பொழுதும் விரோதமாகவே செல்லும் இயற்கையுடையதும் அவித்யையை ஆதியாக உடையதுமான பலவகைப்பட்ட சக்திகள் எவரிடத்தில் ஒரு காரணமுமின்றி உண்டாகின்றனவோ, எவர் எல்லாவற்றையும் படைக்கின்றாரோ, எவர் தேசம் காலம் வஸ்து காரியம் காரணம் இவற்றால் பரிச்சேதம் அற்றவரோ அத்தகைய அனாதியானவரும் ஆனந்தரூபியாகவேமட்டும் இருப்பவரும் விகாரமற்றவருமான பரம்பொருளை நான் வணங்குகிறேன்.

सत्याशिषो हि भगवंस्तव पादपद्म-
माशीस्तथानुभजतः पुरुषार्थमूर्तेः ।
अप्येवमार्य भगवान्परिपाति दीना-
न्वाश्रेव वत्सकमनुग्रहकातरोऽस्मान् ॥

ஸத்யாசிஷோ ஹி பகவம்ஸ்தவ பாதபத்ம-
மாசீஸ்ததாநுபஜத: புருஷார்த்தமூர்த்தே:
அப்யேவமார்ய பகவாந் பரிபாதி தீநா-
ந்வாச்ரேவ வத்ஸகமனுக்ரஹகாதரோ-
ऽஸ்மாந்.

ஏ பகவானே! மிகுந்த ஆனந்தமயமான உமது திருவடிகள், நீரே பரமபுருஷார்த்தமானவர் என்ற எண்ணத்துடன் எப்பொழுதும் பூஜிக்கின்ற நிஷ்காம

பக்தனுக்கு ராஜ்யாதிகளைக் காட்டிலும் உண்மையான பலனாக உள்ளன. இவ்வித மிருந்தபோதிலும் கூட, ஹே ஸ்வாமின்! பகவானாகிய நீர் நன்மை செய்யும் விஷயத்தில் பிரியமானவராக இருந்துகொண்டு காமனையுடன் கூடியவர்களான எங்களை முதல்கற்றும் பசுவானது பாலைக்கொடுத்து கன்றைக் காப்பாற்றுவது போல பாதுகாக்கின்றீர்.

इति ध्रुवस्तुतिः

இவ்வாறு துருவஸ்தோத்ரம்.

॥ गोपिकागीतम् ॥

கோபிகாகீதம்

(இந்த ஸ்தோத்ரத்தை எவனொருவன் 10000 தடவை பக்தியோடு ப்ரதிதினமும் சிறுகச் சிறுக கணக்குப்பண்ணி பாராயணம் செய்து கடைசியில் முடித்து உத்ஸவம் நடத்துகிறானோ, அவனுக்கு ஸகலஸித்தியும் உண்டாகிறது என்பது பெரியோர்களின் ஸம்ப்ரதாயம். ஸ்திரீகளுக்கு சீக்ரமாக ஸித்திக்கும்.)

जयति तेऽधिकं जन्मना व्रजः
श्रयत इन्दिरा शश्वदत्र हि ।

दयित दृश्यतां दिक्षु तावका-
स्त्वयि धृतासवस्त्वां विचिन्वते ॥

ஜயதி தே5திகம் ஜன்மநா வ்ரஜ:
ச்ரயத இந்திரா சச்வதத்ர ஹி
தயித த்ருச்யதாம் திக்ஷு தாவகா-
ஸ்த்வயி த்ருதாஸவஸ்த்வாம் விசிந்வதே.

அன்புள்ள ஹே கிருஷ்ண! உமது அவதாரத்தால் கோகுலமானது அதிக மேன்மையுடையதாக விளங்குகிறது. லக்ஷ்மி எப்பொழுதும் இங்கன்றோ இருக்கிறாள். உம்மைச்சேர்ந்த கோபிகைகள் மட்டும் உம்மிடத்தில் வைக்கப்பட்ட உயிர்களை உடையவர்களாகக் கொண்டு எல்லா திசைகளிலும் உம்மை தேடுகிறார்கள்.

शरदुदाशये साधुजातस-
त्सरसिजोदरश्रीमुषा दृशा ।
सुरतनाथ तेऽशुल्कदासिका
वरद निघ्नतो नेह किं वधः ॥

சரதுதாசயே ஸாதுஜாதஸத்
ஸரஸிஜோதரஸ்ரீமுஷா த்ருசா
ஸுரதநாத தே5சுல்கதாஸிகா
வரத நிக்னதோ நேஹ கிம் வத:

ஹே ஸுரத நாத ! ஹே வரதா! தேவரீர் சரத் காலத்தில் குளங்களில் நன்கு உண்டான நல்லதாமரைப் புஷ்பத்தின் நடுவில் இருக்கின்ற அழகை அபகரிக்கின்ற கண்களால் இயற்கையாகவே அடிமைகளான எங்களை ஏன் வதைக்கிறீர்? இது வதமாகாதா?

विषजलाशयात् व्यालराक्षसात्
वर्षमारुतात् वैद्युतानलात् ।
वृषमयात्मजात् विश्वतो भयात्
ऋषभ ते वयं रक्षिता मुहुः ॥

விஷஜலாசயாத் வ்யாலராக்ஷஸாத்
வர்ஷமாருதாத் வைத்யுதாநலாத்
வ்ருஷமயாத்மஜாத் விச்வதோ பயாத்
ருஷப தே வயம் ரக்ஷிதா முஹு:

ஹே புருஷச்ரேஷ்டனே ! விஷம் கலந்த யமுனா நதி ஜலத்தினின்றும், அகாஸுரனிடமிருந்தும், மழையினின்றும், காற்றினின்றும் இடியினின்றும், அரிஷ்டாஸுரனிடமிருந்தும், வியோமன் என்ற அஸுரனிடமிருந்தும், மற்றும் உள்ள எல்லாவிதமான பயத்திலிருந்தும், உம்மால் நாங்கள் அடிக்கடி ரக்ஷிக்கப்பட்டோம் அல்லவா !

न खलु गोपिकानन्दनो भवा-
नखिलदेहिनामन्तरात्मदृक् ।

विखनसाऽर्थितो विश्वगुप्तये
सख उदेयिवान् सात्वतां कुले ॥

ந கலு கோபிகாநந்தநோ பவாந்
அகிலதேஹிநாமந்தராத்மத்ருக்
விகநஸார்த்திதோ விச்வகுப்தயே
ஸக உதேயிவாந் ஸாத்வதாம் குலே.

நண்ப! தேவரீர் கோபிகையின் புதல்வர் அல்ல. எல்லா ஜீவன்களுக்கும் அந்தர்யாமியாகவே இருப்பவர். பிருஹ்மதேவனல் பிரார்த்திக்கப்பட்டு இவ்வுலகை ரக்ஷிப்பதற்காக யாதவகுலத்தில் அவதரித்திருக்கின்றீர் என்பதே உண்மை.

विरचिताभयं वृष्णिधुर्य ते
शरणमीयुषां संसृतेर्भयात् ।
करसरोरुहं कान्त कामदं
शिरसि धेहि नः श्रीकरग्रहम् ॥

விரசிதாபயம் வ்ருஷ்ணிதுர்ய தே
சரணமீயுஷாம் ஸம்ஸ்ருதேர்பயாத்
கரஸரோருஹம் காந்த காமதம்
சிரஸி தேஹி ந: ஸ்ரீகரக்ரஹம்.

யாதவச்ரேஷ்டனே! காந்தனே! உலகவாழ்க்கையினின்றுமுண்டான பயத்தினல் தேவரீரை சரண

மடைந்தவர்கட்கு அபயமளிக்கின்றதும், வேண்டிய வற்றை யாவையும் கொடுக்கின்றதும் லக்ஷ்மீதேவி யின் கரத்தை பற்றியுள்ளதுமான உமது கராரவிந் தத்தை எமது சிரஸில் வைப்பீராக.

व्रजजनार्तिहन् वीर योषितां
निजजनस्मयध्वंसनस्मित ।
भज सखे भवत्किङ्करीः स्म नो
जलरुहाननं चारु दर्शय ॥

வ்ரஜஜநார்திஹந் வீர யோஷிதாம்
நிஜஜநஸ்மயத்வம்ஸநஸ்மித
பஜ ஸகே பவத்கிங்கரீ: ஸ்ம நோ
ஜலருஹாநநம் சாரு தர்சய.

கோகுலத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் போக்குகின்றவனே! வீரனே! நண்ப னே! தன்னைச் சேர்ந்தவர்களின் கர்வத்தை போக்கு கின்ற புன்சிரிப்பை உடையவரே! உமது அடிமை களாகிய எங்களிடம் வாரும். அழகிய தாமரை போன்ற திருமுகத்தை ஸ்திரீகளாகிய எங்களுக்குக் காண்பிப்பீராக.

प्रणतदेहिनां पापकर्शनं
तृणचरानुगं श्रीनिकेतनम् ।

फणिफणार्पितं ते पदाम्बुजं
कृणु कुचेषु नः कृन्धि हृच्छयम् ॥

ப்ரணததேஹிநாம் பாபகர்சநம்
த்ருணசராநுகம் ஸ்ரீநிகேதநம்
பணிபணார்ப்பிதம் தே பதாம்புஜம்
க்ருணு குசேஷு ந: க்ருந்தி ஹ்ருச்சயம்.

வணங்கியவர்களுடைய பாபங்களைப் போக்கடிக்கின்றதும் பசுக்களை பின்பற்றி செல்லுகின்றதும் லக்ஷ்மீதேவிக்கு இருப்பிடமானதும், காளியன் என்ற பாம்பின் படத்தின் மீது வைக்கப்பட்டதுமான உமது திருவடிகளை எங்களுடைய ஸ்தனங்கள் மீது வைத்து மனதிலுள்ள மன்மத தாபத்தை நாசம் செய்வீராக.

मधुरया गिरा वल्गुवाक्यया
बुधमनोज्ञया पुष्करेक्षण ।
विधिकरीरिमा वीर मुह्यती-
रधरसीधुनाऽऽप्याययस्व नः ॥

மதுரயா கிரா வல்குவாக்யயா
புதமநோஜ்ஞயா புஷ்கரேக்ஷண
விதிகரீரிமா வீர முஹ்யதீ-
ரதரஸீதுநா஽஽ப்யாயயஸ்வ ந:

செந்தாமரைக்கண்ணனே ! வீரனே ! அழகிய வாக்கியங்களை உடையதும் வித்வான்களுடைய மனதைக் கவருகின்றதும் மிகவும் இனிமையுள்ளது மான உமது வார்த்தையினால் மோகம்கொண்ட அடிமைகளாகிய எங்களை உங்கள் உதட்டின் அமுதத்தால் பிழைக்கச் செய்வீராக.

तव कथामृतं तप्तजीवनं
कविभिरीडितं कल्मषापहम् ।
श्रवणमङ्गलं श्रीमदाततं
भुवि गृणन्ति ते भूरिदा जनाः ॥

தவ கதாம்ருதம் தப்தஜீவநம்
கவிபிரீடிதம் கல்மஷாபஹம்
ச்ரவணமங்களம் ஸ்ரீமதாததம்
புவி க்ருணந்தி தே பூரிதா ஜநா:

தாபம் அடைந்தவர்களை பிழைப்பிப்பதும், கவிகளால் கொண்டாடப்படுவதும், பாபத்தை போக்குகின்றதும், கேட்பது என்பதாலேயே மட்டும் மங்களத்தை கொடுக்கின்றதும், சாந்தரஸமுள்ளது மான அம்ருதம் போன்ற உமது கதைகளை, பூமியில் விஸ்தரித்து உரைக்கும் ஜனங்கள் பலவித தானங்களைச் செய்தவர்களாவார்கள்.

प्रहसितं प्रिय प्रेमवीक्षणं
विहरणं च ते ध्यानमङ्गलम् ।
रहसि संविदो या हृदिस्पृशः
कुहक नो मनः क्षोभयन्ति हि ॥

ப்ரஹஸிதம் ப்ரிய ப்ரேமவீக்ஷணம்
விஹரணம் ச தே த்யாநமங்களம்
ரஹஸி ஸம்விதோ யா ஹ்ருதிஸ்ப்ருச:
குஹக நோ மந: க்ஷோபயந்தி ஹி.

பிரியமானவனே ! தேவரீருடைய புன்சிரிப்பும், அன்பு நிறைந்த பார்வையும், த்யானத்தால் மங்களம் கொடுக்கும் உமது திருவிளையாட்டும், மனதில் பதியக் கூடிய ரஹஸ்யமான ஸங்கேத லீலைகளும் எங்களுடைய மனதைக்கலக்குகின்றனவே.

चलसि यद्व्रजाच्चारयन् पशून्
नलिनसुन्दरं नाथ ते पदम् ।
शिलतृणाङ्कुरैः सीदतीति नः
कलिलतां मनः कान्त गच्छति ॥

சலஸி யத்வ்ரஜாச் சாரயந் பசூந்
நளிநஸுந்தரம் நாத தே பதம்
சிலத்ருணாங்குரை: ஸீததீதி ந:
கலிலதாம் மந: காந்த கச்சதி.

நாதனே ! காந்தனே ! பசுக்களை மேய்க்கும் பொருட்டு கோகுலத்திலிருந்து தேவரீர் புறப்பட்டுச் செல்லும் பொழுது, தாமரைப் புஷ்பத்தைக் காட்டிலும் மிருதுவான உமது திருவடிகள் நெல் கதிர்களாலும் புற்களினாலும், முளைகளினாலும் கஷ்டப் படுகின்றதே என்று எண்ணி எங்கள் மனம் கலக்கம் அடைகின்றது.

दिनपरिक्षये नीलकुन्तलैः
वनरुहाननं बिभ्रदावृतम् ।
घनरजस्वलं दर्शयन्मुहुः
मनसि नः स्मरं वीर यच्छसि ॥

திநபரிக்ஷயே நீலகுந்தளை:
வநருஹாநநம் பிப்ரதாவ்ருதம்
கநரஜஸ்வலம் தர்சயந் முஹு:
மநஸி ந: ஸ்மரம் வீர யச்சஸி.

வீரனே ! தேவரீர் ஸாயங்காலங்களில், கருத்த சுருட்டை மயிர்களால் சூழப்பட்டதும், அதிக புழுதியடைந்ததும் தாமரை போன்றதுமான உமது திருமுகத்தின் தரிசனத்தை எமக்கு அடிக்கடி அளித்து எங்களது மனதில் காதலெழச்செய்கிறீர்.

प्रणतकामदं पद्मजार्चितं
धरणिमण्डनं ध्येयमापदि ।

चरणपङ्कजं शंतमं च ते
रमण नः स्तनेष्वर्पयाधिहन् ॥

ப்ரணதகாமதம் பத்மஜார்ச்சிதம்
தரணிமண்டநம் த்யேயமாபதி
சரணபங்கஜம் சந்தமம் ச தே
ரமண நஸ்ஸ்தநேஷ்வர்பயாதிஹந்.

ஹே ரமண! மனதின் கவலையைப்போக்கு கின்றவனே! வணங்கியவர்களுக்கு அவர்களது விருப்பத்தை யளிக்கின்றதும், ஸ்ரீதேவியாரால் பூஜிக்கப்பட்டதும், பூமிக்கு அலங்காரமானதும் ஆபத்காலததில் த்யானிக்கத்தக்கதும், மிகுந்த ஸுகத்தை அளிக்கக்கூடியதுமான உமது திருவடிகளை எங்கள் ஸ்தனங்களில் வைப்பீராக.

सुरतवर्धनं शोकनाशनं
स्वरितवेणुना सुष्ठु चुम्बितम् ।
इतररागविस्मारणं नृणां
वितर वीर नस्तेऽधरामृतम् ॥

ஸுரதவர்தநம் சோகநாசநம்
ஸ்வரிதவேணுநா ஸுஷ்டு சும்பிதம்
இதரராகவிஸ்மாரணம் ந்ருணும்
விதர வீர நஸ்தேऽதராம்ருதம்.

வீரனே ! இன்பத்தை விருத்திசெய்வதும், சோகத்தை நாசம் செய்வதும், நாதம் செய்கின்ற புல்லாங்குழலால் நன்கு மூத்தமிடப்பட்டதும், ஜனங்களை வேறு ஆசைகளை மறக்கும்படி செய்யக் கூடியதுமான தேவரீருடைய உதட்டின் அமுதத்தை எமக்கு அளிப்பீராக.

अटति यद्भवानह्नि काननं
त्रुटि युगायते त्वामपश्यताम् ।
कुटिलकुन्तलं श्रीमुखं च ते
जड उदीक्षतां पक्ष्मकृद्दृशाम् ॥

அடதி யத்பவாநஹ்நி காநநம்
த்ருடி யுகாயதே த்வாமபச்யதாம்
குடிலகுந்தலம் ஸ்ரீமுகம் ச தே
ஜட உதீக்ஷதாம் பக்ஷ்மக்ருத்த்ருசாம்.

தேவரீர் பகலில் கானகத்தில் சஞ்சாரம் செய்யும் பொழுது உம்மைப் பாராதவர்களுக்குச் சிறிது நேரம் கூட ஒரு யுகம்போல் இருக்கிறது. சுருண்ட தலைமயிரை உடைய உமது திருமுகத்தை தரிசிப்பவர்களுடைய கண்களுக்கு இமைக்கொட்டுதலைப் படைத்த பிரஹ்மனை அறிவற்றவனே! என்று சொல்லும் படியாக இருக்கிறது.

पतिसुतान्वयभ्रातृबान्धवा-
नतिविलङ्घ्य तेऽन्त्यच्युतागताः ।

गतिविदस्तवोद्गीतमोहिताः
कितव योषितः कस्त्यजेन्निशि ॥

பதிஸுதாந்வயப்ராத்ருபாந்தவா-
நதிவிலங்க்ய தேऽந்த்யச்யுதாகதா:
கதிவிதஸ்தவோத்கீதமோஹிதா:
கிதவ யோஷித: கஸ்த்யஜேந்நிசி.

ஏமாற்றத்தை அளிப்பவனே ! அச்சுதனே ! கணவன் மகன் மற்ற வம்சத்தவர்கள், ஸஹோதரன் பந்துக்கள் ஆகிய யாவரையும் விட்டு உமது கீதம் வந்த வழியைத்தேடிச் சென்று அதனுல் மோகம் கொண்டு இரவில் உமது அருகில் வந்த ஸ்திரீகளை எவன்தான் விட்டுவிடுவான்?

रहसि संविदं हृच्छयोदयं
प्रहसिताननं प्रेमवीक्षणम् ।
बृहदुरः श्रियो धाम वीक्ष्य ते
मुहुरतिस्पृहा मुह्यते मनः ॥

ரஹஸி ஸம்விதம் ஹ்ருச்சயோதயம்
ப்ரஹஸிதாநநம் ப்ரேமவீக்ஷணம்
ப்ருஹதுரச்ச்ரியோ தாம வீக்ஷ்ய தே
முஹுரதிஸ்ப்ருஹா முஹ்யதே மந:

இன்பத்தை உண்டாக்குகின்ற, தனிமையில் சொல்லப்பட்ட உமது ப்ரிய வார்த்தைகளையும், புன் சிரிப்புள்ள திருமுகத்தையும், இன்பம் நிறைந்த பார்வையையும், லக்ஷ்மீதேவிக்கு இருப்பிடமான உமது அகன்ற மார்பையும் கண்ணுற்ற எங்கள் மனது மிகவும் ஆவலால் அடிக்கடி மோகத்தை அடைகின்றது.

व्रजवनौकसां व्यक्तिरङ्ग ते
वृजिनहन्त्र्यलं विश्वमङ्गलम् ।
त्यज मनाक् च नस्त्वत्स्पृहात्मनां
स्वजनहृद्रुजां यन्निषूदनम् ॥

வ்ரஜவநௌகஸாம் வ்யக்திரங்க தே
வ்ருஜிநஹந்த்ர்யலம் விச்வமங்களம்
த்யஜ மநாக் ச நஸ்த்வத்ஸ்ப்ருஹாத்மநாம்
ஸ்வஜநஹ்ருத்ருஜாம் யந்நிஷூதநம்.

தேவரீருடைய தோற்றமானது கோகுலத்தி லுள்ளவர்கள் எல்லோருடைய பாபத்தையும் போக்கு கின்றதும், உலகத்திற்கு மிகவும் மங்களத்தையளிப் பதுமாகும். ஆகவே உம்மிடம் அன்புகொண்ட மனதை யுடையவர்களான எங்களுடைய மனதி லுள்ள உபாதியை தீர்க்க எதுவுளதோ, அதைக் கொஞ்சம் அளிப்பீராக.

यत्ते सुजात चरणाम्बुरुहं स्तनेषु
भीताः शनैः प्रिय दधीमहि कर्कशेषु ।
तेनाटवीमटसि तद्व्यथते न किंस्वि-
त्कूर्पादिभिर्भ्रमति धीर्भवदायुषां नः ॥

யத்தே ஸுஜாத சரணும்புருஹம் ஸ்தநேஷு
பீதாச்சநை: ப்ரிய ததீமஹி கர்கசேஷு
தேநாடவீமடஸி தத்வ்யததே ந கிம்ஸ்வித்
கூர்பாதிபிர்ப்ரமதி தீர்பவதாயுஷாம் ந:

நல்ல பிறப்பையுடையவனே ! பிரியமானவனே தேவரீருடைய எந்த திருவடித் தாமரைகளை கடினமான எங்கள் ஸ்தனங்கள் மீது வைத்தால் நோகுமோ என பயந்து மெதுவாக நாங்கள் தரிப்போமோ, அந்த சரணாரவிந்தத்தோடு காட்டில் சுற்றி அலைகின்றீரே. நுண்ணிய கற்கள் முதலியவற்றால் அத் திருவடித் தாமரைகள் நோகாவோ! என்றே உம்மை உயிராகக்கொண்ட எங்கள் மனம் கலக்கமடைகிறது.

श्री शुक उवाच —

इति गोप्यः प्रगायन्त्यः प्रलपन्त्यश्च चित्रधा ।
रुरुदुः सुस्वरं राजन् कृष्णदर्शनलालसाः ॥

तासामाविरभूच्छौरिः स्मयमानमुखाम्बुजः ।
पीताम्बरधरः स्रग्वी साक्षान्मन्मथमन्मथः ॥

तं विलोक्यागतं प्रेष्ठं प्रीत्युत्फुल्लदृशोऽबलाः ।
उत्तस्थुर्युगपत्सर्वास्तन्वः प्राणमिवागतम् ॥

ஸ்ரீ சுக உவாச:—

இதி கோப்ய: ப்ரகாயந்த்ய:
ப்ரலபந்த்யச்ச சித்ரதா
நுருது: ஸுஸ்வரம் ராஜந்
க்ருஷ்ணதர்சநலாலஸா:.

தாஸாமாவிரபூச்சௌரி:
ஸ்மயமாநமுகாம்புஜ:
பீதாம்பரதர: ஸ்ரக்வீ
ஸாக்ஷாந்மந்மதமந்மத:.

தம் விலோக்யாகதம் ப்ரேஷ்டம்
ப்ரீத்யுத்புல்லத்ருசோऽபலா:
உத்தஸ்துர்யுகபத் ஸர்வா-
ஸ்தந்வ: ப்ராணமிவாகதம்.

ஸ்ரீ சுகர் சொல்லுகிறார் :—

என்று இவ்வாறாக இனிய குரலுடன் பலவித மாக நன்கு கானம் செய்கின்றவர்களும் புலம்புகின்ற

வர்களுமான கோபிகாஸ்திரீகள் கிருஷ்ணனை தரிசனம் செய்வதில் ஆவல்கொண்டு அழுதனர்.

புன்சிரிப்புடன்கூடிய தாமரை புஷ்பத்தைப் போன்ற திருமுகத்தையுடையவரும், பீதாம்பரத்தை தரித்திருப்பவரும், மாலை அணிந்தவரும், மன்மதனுடைய மனதையும் மயங்கச்செய்கின்றவருமான ஸ்ரீ கிருஷ்ணன் அந்த கோபிகாஸ்திரீகளுக்கு எதிரில் தோன்றினர்.

மிகவும் பிரியமான தோற்றத்தை அளித்த அந்த ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டு கோபிகாஸ்திரீகள் யாவரும், அன்பினால் மலர்ந்த கண்களையுடையவர்களாகி, (சென்றபின் திரும்பிவந்த) பிராணனைப்பெற்ற சரீரம் போல ஒரே ஸமயத்தில் எழுந்திருந்தார்கள்.

॥ इति श्रीगोपिकागीतम् ॥

இவ்வாறு கோபிகாகீதம்.

हर्यष्टकम्

ஹர்யஷ்டகம்

(ப்ரஹ்லாதன் ஸ்ரீஹரி என்ற நாமாவின் மஹிமையை நன்கு அறிந்தவன். அதை மந்திர

மாகக்கூட ஸகல ஆபத்துகளிலும் உபயோகித்து அநேக நன்மைகளைப் பெற்றிருக்கிறான். பரம பாகவதன். ஆதலால் அவர் செய்த இந்த ஹர்யஷ்டகத்தை விடியற்காலையில் பாராயணம் செய்வது பெரியோர்களின் வழக்கம். அதனால் இது அர்த்தத்துடன் இங்கு எழுதப்படுகிறது.

இந்த எட்டு சுலோகங்களும் ஸ்ரீ ஹரிநாமமஹிமையைச் சொல்லுகின்றன. கைகால்கள் தனம்இவைகளையுடையவர்கள் ஸகல தீர்த்தங்களுக்கும் போய் ஸ்நாநம் செய்து தானங்களைச் செய்து பகவானை தரிசனம் பண்ணி விட்டு வரலாம். அவர்களும் இந்த சுலோகங்களை சொல்லிக்கொண்டு பகவானின் குணங்களை தெரிந்து அநுபவிக்கலாம். நொண்டி, கிழவன், குருடன், தீனன் இவர்கள் எப்படி மேல் கூறிய காரியங்களைச் செய்ய முடியும்? ஆனால் அவர்களும் இந்த அஷ்டகத்தைச்சொல்வதால் ஸ்நான தானாதிகளால் உண்டாகும் பலனைப்பெறலாம்.

பாப நிவிர்த்தி, கங்காதி புண்ய தீர்த்தஸ்நானம், தானம், வேதாத்யயனம், யாகம், புண்யதீர்த்தாடனம் இவைகளால் ஏற்படும் பலன் இந்த ஸ்தோத்திரத்தை பக்தியோடு பாராயணம் செய்கிறவர்களுக்கும் ஏற்படுகிறது.)

ब्राह्मे मुहूर्ते संप्राप्ते निद्रां त्यक्त्वा प्रसन्नधीः ।
हरिर्हरिर्हरिरिति व्याहरेद्वैष्णवः पुमान् ॥

ப்ராஹ்மே முஹூர்த்தே ஸம்ப்ராப்தே
நித்ராம் த்யக்த்வா ப்ரஸந்நதீ:
ஹரிர்ஹரிர்ஹரிரிதி
வ்யாஹரேத் வைஷ்ணவ: புமாந்.

விடியற்காலையில் நித்திரையைவிட்டு எழுந்து தெளிவான புத்தியை உடையவனாக ஸ்ரீவைஷ்ணவ னொருவன் ஹரி: என்பதை மூன்றுதரம் அடிக்கடி சொல்லவேண்டும். (ஹரிஎன்ற பதத்திற்கு பாபத்தை போக்குகின்றவன் என்பது அர்த்தம்.)

हरिर्हरति पापानि दुष्टचित्तैरपि स्मृतः ।
अनिच्छयापि संस्पृष्टो दहत्येव हि पावकः ॥

ஹரிர்ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி
ஸ்ம்ருத:
அநிச்சயாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ
ஹி பாவக:

நாம் விரும்பாமல் (அறியாமல்) தொட்டபொழுதும் அக்கி எரிப்பதுபோல, துஷ்ட எண்ணத்தோடு நினைக்கப்பட்டாலும் ஹரி என்ற நாமா பாபங்களைப் போக்கடிக்கிறதன்றோ!

स गङ्गा स गया सेतुः स काशी स च पुष्करः ।
जिह्वाग्रे वर्तते यस्य हरिरित्यक्षरद्वयम् ॥

ஸ கங்கா ஸ கயா ஸேது: ஸ காசீ ஸ ச புஷ்கர:
ஜிஹ்வாக்ரே வர்ததே யஸ்ய ஹரிரித்யக்ஷரத்வயம்.

அவ்வித இரு அக்ஷரங்கள் கொண்ட ஹரி என்ற நாமா எவன் நாக்கிலிருக்கின்றதோ, அவனே கங்கை, கயை, ஸேது, காசி, புஷ்கரம், முதலிய புண்ய தீர்த்தங்களாக ஆகிறான். (அவைகளின் ஸான்னித்யத்தையடைகிறான்.)

गवां कोटिसहस्राणि हेमकन्यासहस्रकम् ।
दत्तं स्यात्तेन येनोक्तं हरिरित्यक्षरद्वयम् ॥

கவாம் கோடிஸஹஸ்ராணி
ஹேமகந்யாஸஹஸ்ரகம்
தத்தம் ஸ்யாத்தேந யேநோக்தம்
ஹரிரித்யக்ஷரத்வயம்.

எவனொருவனால் ஹரி: என்ற இரு அக்ஷரங்கள் உச்சரிக்கப்படுகின்றனவோ, அவனால் அநேகம் கோடிபசுக்களும் தங்கமும் அநேக கன்னிகைகளும் தானம் செய்யப்பட்டதாக ஆகும். (அல்லது தங்கத்தாலலங்கரிக்கப்பட்ட கன்னிகைகள் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.)

वाराणस्यां कुरुक्षेत्रे नैमिशारण्य एव च ।
दत्तं स्यात्तेन येनोक्तं हरिरित्यक्षरद्वयम् ॥

வாராணஸ்யாம் குருக்ஷேத்ரே
நைமிசாரண்ய ஏவ ச
தத்தம் ஸ்யாத்தேந யேநோக்தம்
ஹரிரித்யக்ஷரத்வயம்.

காசியிலும், குருக்ஷேத்திரத்திலும், நைமிசாரண்யத்திலும் செய்த தானத்தின் பயன் யாதோ, அது ஹரி: என்ற அக்ஷரங்களை உச்சரிப்பதாலுண்டாகும்.

ऋग्वेदोऽथ यजुर्वेदः सामवेदोऽप्यथर्वणः ।
अधीतास्तेन येनोक्तं हरिरित्यक्षरद्वयम् ॥

ருக்வேதோऽத யஜுர்வேத:
ஸாமவேதோऽப்யதர்வண:
அதீதாஸ்தேந யேநோக்தம்
ஹரிரித்யக்ஷரத்வயம்.

ருக், யஜுஸ், ஸாம அதர்வ வேதங்களை நியமத்துடன் அத்தியயனம் செய்தபலன் ஹரி: என்ற இரு அக்ஷரங்களைச் சொல்வதால் அடைகிறுன்.

अश्वमेधैर्महायज्ञैर्वाजपेयैः सदक्षिणैः ।
इष्टं स्यात्तेन येनोक्तं हरिरित्यक्षरद्वयम् ॥

அச்வமேதைர்மஹாயஜ்ஞைர்
வாஜபேயைஸ்ஸதக்ஷிணை:
இஷ்டம் ஸ்யாத்தேந யேநோக்தம்
ஹரிரித்யக்ஷரத்வயம்.

எவர்கள் ஹரி: என்ற இரு அக்ஷரங்களைச் சொல்லுகிறார்களோ, அவர்கள் பூர்ண தக்ஷிணையுடன் அசுவமேதம், வாஜபேயம் என்ற பெரிய யாகங்களைச் செய்வதால் ஏற்படும் பயனை அடைந்தவர்களாவார்கள்.

पृथिव्यां यानि तीर्थानि पुण्यान्यायतनानि च ।
तानि सर्वाण्यशेषाणि हरिरित्यक्षरद्वयम् ॥

ப்ருதிவ்யாம் யாநி தீர்த்தாநி
புண்யாந்யாயதநாநி ச
தாநி ஸர்வாண்யசேஷாணி
ஹரிரித்யக்ஷரத்வயம்.

இரண்டு அக்ஷரங்களுடன் கூடிய 'ஹரி' என்ற பகவந்நாமாவே இப்பூமியிலுள்ள புனிதமான எல்லா தீர்த்தங்களாகவும் ஆலயங்களாகவும் ஆகிறது. (எங்கு ஹரி: என்ற உச்சரிப்பு உண்டாகிறதோ, அங்கு ஸர்வபுண்ய தீர்த்த ஸான்னித்யமும், புண்ணியங்களுக்கு ஹேதுவான ஆலய ஸான்னித்யமும் உண்டு என்று கருத்து.)

हर्यष्टकमिदं पुण्यं प्रातरुत्थाय यः पठेत् ।
आयुष्यं बलमारोग्यं सर्वपापप्रणाशनम् ॥

प्रह्लादेन कृतं स्तोत्रं दुःखसागरशोषणम् ।
यः पठेत्स नरो याति तद्विष्णोः परमं पदम् ॥

ஹர்யஷ்டகமிதம் புண்யம்
ப்ராதருத்தாய ய: படேத்
ஆயுஷ்யம் பலமாரோக்யம்
ஸர்வபாபப்ரணாசநம்.

ப்ரஹ்லாதேந க்ருதம் ஸ்தோத்ரம்
துக்கஸாகரசோஷணம்
ய: படேத் ஸ நரோ யாதீ
தத்விஷ்ணோ: பரமம் பதம்.

ஆயுள், பலம், ஆரோக்யம், இவற்றை அளித்து பாபத்தை அழிக்கின்றதும், ப்ரஹ்லாதனால் சொல்லப் பட்டதும், துக்கமென்னும் கடலை சோஷிக்கச் செய் கின்றதுமான இந்த ஹர்யஷ்டகம் என்ற ஸ்தோத் திரத்தை எவனொருவன் காலையிலே எழுந்திருந்து சொல்லுகிறானோ, அவன் (அந்தியதசையில்) ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் இருப்பிடத்தை அடைவான்.

प्रातःस्मरणम्

ப்ராத: ஸ்மரணம்

(வெகுகாலமாக முதலையால் பீடிக்கப்பட்டு மிகவும் ச்ரமப்பட்ட யானையை ஒரு நாள் விடியற் காலையில் கருடாரூடராக வந்து பஞ்சாயுததரனான பகவான் காப்பாற்றினார் என்ற காரணத்தால் இந்த ஸ்தோத்திரம் விடியற்காலையில் பெரியோர்களால் சொல்லப்படுகிறது.)

प्रातः स्मरामि भवभीतिमहार्तिशान्त्यै
नारायणं गरुडवाहनमञ्जनाभम् ।
ग्राहाभिभूतमदवारणमुक्तिहेतुं
चक्रायुधं तरुणवारिजपत्रनेत्रम् ॥

ப்ராத: ஸ்மராமி பவபீதிமஹார்திசாந்த்யை
நாராயணம் கருடவாஹநமஞ்சநாபம்
க்ராஹாபிபூதமதவாரணமுக்திஹேதும்
சக்ராயுதம் தருணவாரிஜபத்ரநேத்ரம்.

அதிகாலையில், கருடவாஹனத்தில் அமர்ந்தவரும், மைபோன்ற காந்தியை உடையவரும், முதலையால் அன்புறுத்தப்பட்ட மதங்கொண்ட யானைக்கு மோக்ஷமளித்தவரும், சக்ராயுதம் தரித்தவரும்,

அன்று மலர்ந்த தாமரைபோன்ற கண்களையுடைய வருமான நாராயணனை ஸம்ஸார பயம் நீங்குவதற்காக நான் தியானம் செய்கிறேன்.

प्रातर्नमामि मनसा वचसा च मूर्ध्ना
पादारविन्दयुगलं परमस्य पुंसः ।
नारायणस्य नरकार्णवतारणस्य
पारायणप्रवणविप्रपरायणस्य ॥

ப்ராதர்நமாமி மநஸா வசஸா ச மூர்த்நா
பாதாரவிந்தயுகளம் பரமஸ்ய பும்ஸ:
நாராயணஸ்ய நரகார்ணவதாரணஸ்ய
பாராயணப்ரவணவிப்ரபராயணஸ்ய.

நரகமென்ற பெரிய சமுத்திரத்திலிருந்து நம்மை மீட்பவரும், பகவந்நாமத்திலீடுபட்ட ப்ராஹ்மணர்களிடம் அன்பு கொண்டவரும், பரமபுருஷனுமாகிய நாராயணனுடைய இரு திருவடித்தாமரைகளையும் அதிகாலையில் மனதாலும் வாயாலும், தலையாலும், நான் வணங்குகிறேன்.

प्रातर्भजामि भजतामभयंकरं तं
प्राक्सर्वजन्मकृतपापभयापनुत्यै ।
यो ग्राहवक्त्रपतिताङ्घ्रिगजेन्द्रघोर-
शोकप्रणाशनकरो धृतशङ्खचक्रः ॥

ப்ராதர்பஜாமி பஜதாமபயம்கரம் தம்
ப்ராக்ஸர்வஜந்மக்ருதபாபபயாபநுத்யை
யோ க்ராஹவக்த்ரபதிதாங்க்ரிகஜேந்த்ரகோர
சோகப்ரணுசநகரோ த்ருதசங்கசக்ர:

பூஜிப்பவனுக்கு அபயமளிப்பவனும், முதலையின் வாயில் அகப்பட்டுக்கொண்ட கால்களையுடைய கஜேந்திரனின் பெரிய துக்கத்தைப் போக்கடித்தவனும், சங்கம் சக்ரம் தரித்தவனுமாகிய பகவானை முன் ஜன்மங்களில் செய்த பாபங்கள் நீங்கும் பொருட்டு விடியற்காலையில் பஜிக்கிறேன்.

श्लोकत्रयमिदं पुण्यं प्रातरुत्थाय यः पठेत् ।
लोकत्रयगुरुस्तस्मै दद्यादात्मपदं हरिः ॥

ச்லோகத்ரயமிதம் புண்யம் ப்ராதருத்தாய ய:
படேத்
லோகத்ரயகுருஸ்தஸ்மை தத்யாதாத்மபதம் ஹரி:.

இம்மூன்று சுலோகங்களால் காலையில் பகவானைத் துதிப்பவர்களுக்கு (அந்திம தசையில்) மூவுலகத்திற்கும் குருவாக விளங்கும் பகவான் தன்னுடைய பதத்தை அளிக்கிறார்.

कृष्णाष्टकम्

கிருஷ்ணாஷ்டகம்

எல்லாவிதமான பாபத்திற்கும் ப்ராயச்சித்த மாக ஸ்ரீக்ருஷ்ணனின் நாமஸ்மரணத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆதலால் இந்த ஸ்தோத்திரம் மிகவும் முக்கியம்.

वसुदेवसुतं देवं कंसचाणूरमर्दनम् ।
देवकीपरमानन्दं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

வஸுதேவஸுதம் தேவம்கம் ஸசாணூரமர்தநம்
தேவகீபரமாநந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்
குரும்.

கம்ஸன் சாணூரன் முதலிய அரக்கர்களைக் கொன்றவனும், வஸுதேவருடைய புதல்வனும், தேவகியின் பரமானந்தத்திற்கு காரணமானவனும், உலகிற்கே குருவாகவிளங்கும் தேவனுமான ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

अतसीपुष्पसङ्काशं हारनूपुरशोभितम् ।
रत्नकङ्कणकेयूरं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

அதஸீபுஷ்பஸங்காசம்
ஹாரநூபுரசோபிதம்

ரத்ந கங்கண கேயூரம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

காசாம்பூ மேனியை உடையவனும், ஹாரம் தண்டை இவைகளால் அலங்கரிக்கப் பெற்றவனும், ரத்னங்களாலான கை வளையல்களையும், தோள் வளையல்களையும் தரித்தவனும், ஜகத் குருவுமான ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

कुटिलालकसंयुक्तपूर्णचन्द्रनिभाननम् ।
विलसत्कुण्डलधरं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

குடிலாலக ஸம்யுக்த-
பூர்ண சந்த்ர நிபாநநம்
விலஸத் குண்டல தரம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும்.

சுருட்டையான தலைமயிரோடு கூடின பூர்ண சந்திரன் போன்ற முகத்தை உடையவரும் குண்டலங்கள் தரித்தவருமான ஜகத் குருவான ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

मन्दारगन्धसंयुक्तं चारुहासं चतुर्भुजम् ।
बर्हिपिञ्छावचूडाङ्गं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

மந்தார கந்த ஸம்யுக்தம்
சாருஹாஸம் சதுர்புஜம்

பர்ஹி பிஞ்சாவசூடாங்கம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும்.

வாஸனையுள்ள மந்தார புஷ்ப ஹாரம் அணிந்தவனும், சிரித்த முகத்தையுடையவனும், நான்கு கைகளை உடையவனும், மயில் தோகையை தலையில் அணிந்தவனும், ஜகத் குருவுமான ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

उत्फुल्लपद्मपत्राक्षं नीलजीमूतसन्निभम् ।
यादवानां शिरोरत्नं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

உத்புல்ல பத்ம பத்ராக்ஷம்
நீல ஜீமூத ஸந்நிபம்
யாதவாநாம் சிரோரத்நம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும்.

மலர்ந்த தாமரை இதழ்போன்ற கண்களை உடையவனும், நீருண்ட கருமேகம் போன்ற திருமேனியுடையவனும், யாதவ குலத்திற்கு சிறந்த ரத்னமாக விளங்கும் ஜகத் குருவுமான ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

रुक्मिणीकेलिसंयुक्तं पीताम्बरसुशोभितम् ।
अवाप्ततुलसीगन्धं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

ருக்மிணீ கேளிஸம்யுக்தம்
பீதாம்பர ஸுசோபிதம்
அவாப்த துளஸீ கந்தம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

ருக்மிணியோடு லீலைகள் செய்கின்றவனும், பீதாம்பரத்தை தரித்தவனும், துளசி மாலையின் வாசனையை உடையவனும், ஜகத் குருவுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

गोपिकानां कुचद्वन्द्वकुङ्कुमाङ्कितवक्षसम् ।
श्रीनिकेतं महेष्वासं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

கோபிகாநாம் குசத்வந்த்வ-
குங்குமாங்கித வக்ஷஸம்
ஸ்ரீநிகேதம் மஹேஷ்வாஸம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

கோபிகா ஸ்திரீகளின் ஸ்தனங்களிலுள்ள குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட மார்பையுடையவனும், லக்ஷ்மிக்கு இருப்பிடமானவனும், மஹிமையுள்ள சார்ங்கம் என்ற வில்லையுடையவனுமான ஜகத் குருவான ஸ்ரீகிருஷ்ணனை வணங்குகிறேன்.

श्रीवत्साङ्कं महोरस्कं वनमालाविराजितम् ।
शङ्खचक्रधरं देवं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥

ஸ்ரீ வத்ஸாங்கம் மஹோரஸ்கம்
வநமாலாவிராஜிதம்
சங்க சக்ரதரம் தேவம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

ஸ்ரீ வத்ஸத்தை யடையாளமாக உடையவனும் அகன்ற மார்பையுடையவனும், வனமாலையால் சோபிக்கிறவனும், சங்க சக்ரங்களை தரித்தவனும் ஜகத் குருவுமான ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன்.

कृष्णाष्टकमिदं पुण्यं प्रातरुत्थाय यः पठेत् ।
कोटिजन्मकृतं पापं स्मरणेन विनश्यति ॥

க்ருஷ்ணாஷ்டகமிதம் புண்யம்
ப்ராதருத்தாய ய: படேத்
கோடி ஜந்ம க்ருதம் பாபம்
ஸ்மரணேந விநச்யதி.

இந்த எட்டு சுலோகங்கள் அடங்கிய ஸ்தோத்திரத்தை எவன் ஒருவன் காலையில் எழுந்திருந்து சொல்லுகிறானோ, அவனுடைய கோடி ஜன்மங்களில் செய்த பாபங்களும் ஸ்மரண மாத்திரத்திலேயே நாசமடைகின்றன.

मानसिकस्नानम्

மாநஸிக ஸ்நாநம்

